தமிழ்நாடு • மகளிர் மேம்பாட்டு •

முற்றம்

ரூ. 15/- | மலர் 19 - இதழ் 02 - ஜூன் 2017 | மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ் | **ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**

திட்டப் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

மா கூழ் பதனிடும் அலகு நிறுவுவதற்கான ஒப்பந்தம்

உலக வங்கி குழுவினர் கலந்தாலோசனைக் கூட்டம்

மாநில அளவிலான பயிற்சிப் பட்டறை

திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப.,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
திட்ட இயக்குநர், புதுவாழ்வு திட்டம்

அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,

தமிழகத்தில் பெண்கள் பொருளாதார வளர்ச்சி பெறவும், அவர்களின் திறமைகளை வெளிப்படுத்தவும் தமிழக அரசு தீட்டிவரும் திட்டங்களை, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் புதுவாழ்வு திட்டம் ஆகியவை திறம்பட செயல்படுத்தி வருகின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள்.

மேற்கண்ட நிறுவனங்களின் அயராத செயல் பாட்டின் பலனாக இன்று சுய உதவிக் குழுக்களின் மகளிராகிய நீங்கள், தொழில் முனைவோர்களாக உருமாறி, பல்வேறு தொழில் அமைப்புகளை உருவாக்கி, பொருளாதார சுயசார்பு பெற்று வருகின்றீர்கள். உங்களின் வெற்றிப் பயணம் தொடர எனது வாழ்த்துகள்.

'முயற்சி திருவினையாக்கும்' என்ற வார்த்தைகளுக்கு ஏற்ப, நீங்கள் இன்று பெற்றுள்ள வெற்றிகளுக்கு உங்களின் ஊக்கமும், செயல் திறமும், ஒன்றுபட்ட உழைப்பும் தான் காரணம் என்பதை யாராலும் மறுக்க முடியாது. எடுத்த செயலில் வெற்றி பெற எத்தகைய தடைகள் வந்தாலும் அவைகளைத் தகர்த்து, வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு உழைத்த உங்களுக்கு இன்று அதற்கான பலன்கள் கிடைத்து வருகின்றன.

'பெண்களால் என்ன செய்ய முடியும்?' என்று நினைத்தவர்களுக்கு, 'எங்களாலும் சாதிக்க முடியும்' என்பதை உண்மையாக்கிக் காட்டிய உங்களால் தான் நமது நிறுவனத் திற்கும், மாநிலத்திற்கும், நாட்டிற்கும் பெருமை.

சுற்றுச் சூழல் பாதுகாப்பு, மழை நீர் சேகரிப்பு, பிளாஸ்டிக் பயன்பாடு தவிர்ப்பு, மரம் வளர்ப்பு, பெண் கல்வி போன்ற பல்வேறு குறிக்கோளைக் கொண்டு செயல்பட்டு வரும் உங்களின் செயல்களுக்கும், முயற்சிகளுக்கும் நமது நிறுவனங்கள் என்றும் துணை நிற்கும்.

இத்தகைய சிறப்புகளைப் பெற்றுள்ள உங்களுடன் மாதந்தோறும் முற்றம் இதழின் வாயிலாக எனது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

பருவ மழைத் துவங்கி உள்ள இந்த நேரத்தில் ஒவ்வொரு மழைத் துளியையும் பாதுகாக்க வேண்டிய கட்டாயம் நம் அனைவருக்கும் இருக்கிறது. எனவே மழை நீர் சேகரிப்பு அமைப்புகளை உருவாக்கும் முயற்சிகளை அனைவரும் மேற்கொள்ள வேண்டும். மேலும் மரம் வளர்ப்பதின் அவசியத்தை இளைய தலைமுறையினருக்கு உணர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மீண்டும் சந்திப்போம்.

அன்புடன்,

பிரவீன் பி நாயர், இ.ஆ.ப.,

மேலாண்மை இயக்குநர்

உள்ளே...

கூட்டமைப்பு மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு நலத் திட்ட உதவிகள் 05

தனியார் நிறுவனங்களில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு 09

சமையலறையில் இருக்கும் அழகுப் பொருட்கள் 10

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் 23

வாழ்வாதார நடவடிக்கைகளுக்கான ஆய்வுக் கூட்டம் 26

திருநெல்வேலி மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகள் ஆய்வு 30

நாட்டுக் கோழி வளர்ப்பு 34

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

முற்றம் இதழை என் குழந்தைகள் விரும்பிப் படிக்கின்றனர். நம் இதழில் இடம் பெற்றுள்ள தகவல்களை குழுக் கூட்டங்களில் சொல்லி, மகளிருக்கு விழிப்புணர்வு அளித்து வருகிறேன். சுகாதாரம் குறித்த கட்டுரைகள், கதைகள் சிறப்பாக வெளியிடப்பட்டு வருகின்றன.

திருமதி. பத்மாவதி கிருஷ்ணசாமி,
மகளிர் குழு பயிற்றுனர்,
கீழ சோத்திரியம் – அதம்பார், நன்னிலம்.

கிராமப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் வறுமையைப் போக்கி, அவர்களுக்கு வளமான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் செயல் படும் புதுவாழ்வு திட்டம் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் செயல்பாடுகள் குறித்த கட்டுரைகள் எங்களுக்கு ஊக்கத்தைத் தருகின்றன.

திருமதி. மலர்கொடி துரைசாமி,
மாடம்பாக்கம் ஊராட்சி கூட்டமைப்பு,
காஞ்சிபுரம் மாவட்டம்.

திறந்த வெளி மலம் கழித்தலற்ற ஊராட்சிகளை உருவாக்க, ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் செயல்பாடுகள் குறித்த கட்டுரைகளும், படக் கதைகளும், கழிவறை குறித்த போட்டியில் தேர்வு செய்யப்பட்ட கடிதங்களும் முற்றம இதழின் வாயிலாக அறிந்து கொள்கிறோம்.

திருமதி. சிவகாமி ராமகிருஷ்ணன்,
உமையாள்புரம் ஊராட்சிக் கூட்டமைப்பு
தஞ்சாவூர் மாவட்டம்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்கரையோரப் பகுமிதிகளில் வசிக்கும் மக்களுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகளை செய்த வரும், சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் செயல்பாடுகளும், மேலும் பல மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருவதை குறித்து செய்திகளும் சிறப்பாக உள்ளன.

நிர்வாகிகள் / உறுப்பினர்கள்,
கடல் மீன்கள் சுய உதவிக் குழு,
பழவேற்காடு, திருவள்ளூர் மாவட்டம்.

இப்படிக்கு

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

www.tamilnadumahalir.org/mutram

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●

முற்றம்

மலர் 19 – இதழ் 02 – ஜூன் 2017

விலை ரூ. 15/–

கௌரவ ஆசிரியர்
திரு. **பிரவீன் பி நாயர்,** இ.ஆ.ப.,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்
எஸ். அமிர்த ஜோதி
பொது மேலாளர்

ஆசிரியர் குழு
கோ. லட்சுமிபதி
கூடுதல் இயக்குநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

பா. செல்வராஜன்
கூடுதல் இயக்குநர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

சி. சுஜாதா ஜேக்கப்
கூடுதல் இயக்குநர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஜா. சம்பத்
கூடுதல் திட்ட இயக்குநர்
புதுவாழ்வு திட்டம்

சு. சிநேகலதா
கூடுதல் திட்ட இயக்குநர்
புதுவாழ்வு திட்டம்

ஜா. பெஞ்சமின் விக்டர்
தகவல் தொடர்பு வல்லுநர் (பொ)

பொறுப்பாசிரியர்
சு. மகேஷ்வரன்
மக்கள் தொடர்பு அலுவலர்

துணை ஆசிரியர் முற்றம்
ஏ. கண்ணன்

முதுநிலை கணக்காளர்
சு. சசிகலா

பிழை திருத்துபவர்
எஸ். எஸ். ரவிச்சந்திரன்

கணினி வடிவமைப்பு
கோ. குருபிரசாத்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்'
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

தொலைபேசி : 044 – 4211 9497
044 – 2817 3412 / 3413
தொலை நகல் : 044 – 2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

ஆசிரியரிடமிருந்து...

மருத்துவர்களின் சமூகப் பொறுப்பு...

அன்புள்ள வாசகர்களுக்கு,

பிள்ளைகள் பள்ளி கல்வியை முடித்து, மேற்படிப்பில் சேருவதற்கு மாணவர்களும், பெற்றோர்களும் அதிக அலைச்சலுடன் இருந்திருப்பீர்கள். என்ன படிப்பை தேர்ந்தெடுக்க விரும்புகிறீர்கள்? என்ற வினாவிற்கு, பெரும்பாலான மாணவர்கள் மருத்துவப் படிப்பிற்கே முன்னுரிமை கொடுக்கின்றனர். ஆனால், தற்பொழுது மத்திய அரசால் அறிவிக்கப்பட்டு நடைபெற்று வரும் 'நீட்' என்ற நுழைவுத் தேர்வு பல மாணவர்களின் கனவைத் தகர்த்து வருகின்றது. இப்பிரச்சனையைப் போக்குவதற்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அறிவித்துள்ள நடவடிக்கைகள் பாராட்டுக்குரியதாகும். எனவே, பெற்றோர்கள் மருத்துவ படிப்பிற்குச் செல்ல விரும்பும் மாணவர்களுக்கு அதற்குரிய தயாரிப்பை தொடக்கத்திலிருந்தே மேற்கொள்ள உதவ வேண்டும்.

மருத்துவ படிப்பு என்பது மகத்தான ஒன்றுதான். மக்களுக்கு, குறிப்பாக கிராமப்புற ஏழை எளிய மக்களுக்குப் பணியாற்றுவதற்கான சிறந்த வாய்ப்பாகும். அதோடு சமுதாயத்தில் சிறப்பான அந்தஸ்தையும் கொடுக்கின்ற ஒரு படிப்புதான் மருத்துவம். அதற்காக அனைவருமே மருத்துவராக வர வேண்டும் என எதிர்பார்ப்பது எவ்விதத்திலும் சாத்தியமாகாது. இதேபோன்று சிறப்பாக மக்களுக்கு சேவை செய்வதற்கான பல்வேறு படிப்புகளும் உள்ளன என்பதை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டியுள்ளது.

மனித உயிர்களைக் காக்கும் மருத்துவர்களை மக்கள் கடவுளாகவே பார்க்கின்றனர். இவ்வித சிறப்புகளைக் கொண்ட மருத்துவர்களுக்கு நன்றி கூறும் வகையிலும், மருத்துவர்களின் சேவைகளைப் பாராட்டி அவர்களை உற்சாகப்படுத்தும் நோக்கிலும், அவர்களின் சமுதாய கடமைகளையும், பொறுப்புகளையும் புதுப்பித்துக் கொள்வதற்கு நினைவூட்டும் வகையிலும் ஒவ்வொரு ஆண்டும் ஜுலை மாதத்தில் உலக அளவில் மருத்துவர் தினம் அனுசரிக்கப்பட்டு வருகிறது. ஒருமுறை, வானொலியில் இன்று ஒரு தகவல் என்ற நிகழ்ச்சியில் கூறிய கருத்தினை இங்கே குறிப்பிட விரும்புகிறேன், 'மரணம் மூன்று வகையில் வரும். அதாவது இயற்கையாக வரும் மரணம், விபத்தினால் ஏற்படும் மரணம், மருத்துவரின் தவறான பரிசீலனையால் ஏற்படும் மரணம்'. எனவேதான் மருத்துவர்கள் நோயை சரியாகக் கண்டுபிடிக்கும் வரை நோயாளிகள் பொறுமை காக்கவும், மருத்துவர்களோடு ஒத்துழைக்கவும் வேண்டியது அவசியமாகிறது.

ஒரு மருத்துவரை உருவாக்க அரசாங்கம் பல இலட்சம் ரூபாய் செலவு செய்கிறது. ஆனால் மருத்துவப் படிப்பை முடித்து விட்டு, பல மருத்துவர்கள் கிராமப்புறங்களில் பணியாற்ற முன் வருவதில்லை என்பது வருந்தத்தக்கது. நம் நாட்டு மக்களின் வரிப் பணத்தில் படித்து பட்டம் பெற்றவர்கள், வெளிநாடுகளில் பணி புரிய செல்வது நாட்டிற்கு உகந்தது அல்ல. எனவேதான் கிராமப்புறத்தில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு, மருத்துவ மேற்படிப்பில் சேர்வதற்கு தமிழக அரசு முன்னுரிமை கொடுத்திருப்பது வரவேற்கக் கூடியது. எந்த ஒரு நோய்க்கும் சிகிச்சை பெற செல்லும் போது முதலில் பொது மருத்துவரிடம் சென்று, அவரது ஆலோசனையின்படி சிறப்பு மருத்துவர்களிடம் செல்ல வேண்டும் என உலக சுகாதார நிறுவனம் வலியுறுத்துகிறது. இதை நாம் தவறாமல் பின்பற்ற வேண்டும். ■

இப்படிக்கு,

(எஸ். சின்னப்பன்)
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

திட்டப் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

சேலம் மாவட்டம், ஏற்காட்டில் 42வது கோடை விழா மற்றும் மலர்க் கண்காட்சி மே மாதம் 27ஆம் தேதி முதல் 29ஆம் தேதி வரை மூன்று நாட்கள் நடைபெற்றது. இந்தக் கண்காட்சியினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்கள் திறந்து வைத்து சிறப்பித்தார்கள்.

கோடை விழாவின் ஒரு பகுதியாக பல்வேறு துறைகளின் மூலம் அமைக்கப்பட்டிருந்த அரங்கங்களை திறந்து வைத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், அங்கு புதுவாழ்வு திட்டத்தின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனை அரங்கினைப் பார்வையிட்டு, சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார்.

பின்னர் நடைபெற்ற நலத் திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில், சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியத்தில் உள்ள கல்வராயன் மலைப் பகுதியில், புதுவாழ்வு திட்டம் மூலமாக ஓட்டுநர் பயிற்சி பெற்ற 10 பழங்குடியின இளைஞர்களுக்கு 50% தாட்கோ மானியம் மற்றும் 50% வங்கிக் கடன் மூலமாக தலா ரூ. 4,99,630/- மதிப்பிலான நான்கு சக்கர வாகனங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. துரைக்கண்ணு அவர்கள், சேலம் மாவட்ட ஆட்சியர் திரு. வா. சம்பத், இ.ஆ.ப., அவர்கள், நாடாளு மன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சேலம் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. தரணி அவர்கள் மற்றும் பிற துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டமைப்பு மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள்



தூத்துக்குடி மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகத்தில் நடைபெற்ற விழாவில், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் திரு. ரவிக்குமார், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் செ. ராஜீ அவர்கள், தூத்துக்குடி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் தளவாய்புரம் மற்றும் நல்லூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஊக்க நிதியாக தலா ரூ. 1 இலட்சமும், தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் அமைக்கப் பெற்ற 28 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியாக தலா ரூ. 10,000/- காசோலையாக வழங்கினார்

மேலும் 12.04.2017 அன்று மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்களின் அடிப்படையில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் தூத்துக்குடி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் 4 சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு தையல் இயந்திரங்கள் மற்றும் கோவில்பட்டி கோட்டாட்சியர் மூலம் சுய உதவிக் குழு உறுப்பினர் ஒருவருக்கு ஆதரவற்ற விதவை சான்று ஆகியவை வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் ஆய்வு

வேலூர் மாவட்டம்

வேலூர் மாவட்ட ஆட்சியர் திரு. சி. அ. ராமன், இ.ஆ.ப., அவர்கள், வேலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளை 06.05.21017 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின் முதன் கட்ட மாக திருப்பத்தூரில் ஜெயராம் அறக்கட்டளையின் மூலம் நடைபெற்று வரும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் முழு நேர வேலைவாய்ப்புத் திறன் வளர்ப்பு தையல் கலைப் பயிற்சியினை பார்வையிட்டு ஆய்வு செய்து, பயிற்சி பெறுவோருக்கு தையல் உபகரணங்களை வழங்கி, சிறப்பாக பயிற்சி பெற்று பயனடைய வேண்டும் என்று கூறினார்.

மேலும் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில், புதிய சிறப்பு வாழ்வாதார திட்டம் 2016-17ன் கீழ், அண்ணாண்டன்பட்டி ஊராட்சியில், துணி நூலில் இயந்திர துடைப்பான் தயாரித்தல் மற்றும் செயற்கை ஆபரணங்கள் தயாரித்தல் தொழிலில் ஈடுபட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கியதுடன், நலிவுற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு வளர்ச்சி நிதி கணக்கிலிருந்து கடனுதவிகளையும் வழங்கினார். பின்னர் சௌடேகுப்பம் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பின் மூலம் கடனுதவி பெற்று, நாட்டுக் கோழி வளர்ப்பில் ஈடுபட்டு வரும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு கோழிக்குஞ்சுகளை வழங்கிய மாவட்ட ஆட்சியர் அவர்கள், கோழி வளர்ப்பில் சிறப்பாக ஈடுபட அறிவுரைகளை வழங்கினார்.

அதைத் தொடர்ந்து திம்மணாமுத்தூர் ஊராட்சி குழு கூட்டமைப்பின் மூலம் கடனுதவி பெற்று, செயற்கை பிளாஸ்டிக் ஆபரணப் பூக்கள் மற்றும் வாயிற் தோரணங்கள் உற்பத்தி செய்யும் சுய உதவிக் குழுவின் செயல்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்த மாவட்ட ஆட்சியர் அவர்கள் மேலும் சிறப்பாக செயல்பட தேவையான ஆலோசனைகளை வழங்கினார்.

இந்த ஆய்வின்போது வேலூர் மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஆ. ரா. சிவராமன் அவர்களும் மற்றும் உதவித் திட்ட அலுவலர்களும் உடனிருந்தனர். ■

மகளிர் சுய உதவிக் குழுக்களின் கணக்குப் பரிவர்த்தனை கையாளும் முறையை நடைமுறைப்படுத்துதல் குறித்த மாநில அளவிலான பயிற்சி பட்டறை

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு புதுவாழ்வு திட்டத்தின் மாநில மற்றும் மண்டல அளவிலான மையக்குழு உறுப்பினர்களுக்கு பரிவர்த்தனை அடிப்படையிலான சுய உதவிக் குழுக்களின் கணக்கியல் அமைப்புகள் குறித்த பயிற்சிப் பட்டறை 05.06.2017 மற்றும் 06.06.2017 ஆகிய இரண்டு நாட்கள் சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் உள்ள தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூட்ட அரங்கில் நடைபெற்றது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., அவர்கள் இந்தக் கருத்துப் பட்டறையினை துவக்கி வைத்து, சுய உதவிக் குழுக்கள் மற்றும் சமுதாய அடிப்படையிலான அமைப்புகளின் பரிவர்த்தனை விவரங்கள் உட்பட அனைத்து சாராம்சங்களிலும் Database தளத்தை உருவாக்க வேண்டியதின் முக்கியத்துவம் குறித்து விளக்கிப் பேசினார்.

கூடுதல் இயக்குநர் (கூடுதல் மற்றும் கூட்டாண்மை) திரு. பா. செல்வராஜன் அவர்கள், சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் குறித்த விபரங்களை கணினி முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதின் முக்கியத் துவம் குறித்தும், கூடுதல் இயக்குநர் (திறன் வளர்ப்பு) திருமதி. சி. சுஜாதா ஜேக்கப் அவர்கள் பயிற்சிப் பட்டறை குறித்த குறிப்புகளையும், அதன் முக்கியத்துவம் குறித்தும் எடுத்துரைத்தார்.

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மேலாளர் (MIS - ICT) திரு. சாந்தனு அவர்களும், முதன்மை அலுவலர் (NIC – புதுடெல்லி) திரு. கணேஷ் அவர்களும், இரண்டு நாட்களும் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டு, பயிற்றுனர்களுக்கு, சுய உதவிக் குழுக்களின் கணக்கு பரிவர்த்தனை கையாளுதல் குறித்த நடைமுறை தொடர்புடைய பயிற்சிகளை வழங்கியதோடு, இந்த அமைப்பு முறையை செயல்படுத்துவதற்கான பல்வேறு குறிப்புகள் மற்றும் விளக்கங்களையும் விரிவாக எடுத்துரைத்தனர்.

இந்தக் கருத்துப் பட்டறையில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் புதுவாழ்வு திட்டத்தின் அலுவலர்கள், இரண்டு அமைப்புகளின் பணியாளர்கள், மாநில மற்றும் மண்டல அளவிலான மையக்குழு உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

தீனதயாள் உபாத்தியாய கௌசல்யா யோஜனா திட்டத்தின் (DDU GKY) கீழ் விண்ணப்பம் செய்துள்ள திட்ட செயல்பாட்டு நிறுவனங்களின் (PIAs) கருத்துருக்களை மதிப்பீடு செய்யும் இரண்டாம் கட்ட நிகழ்வு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் அங்கமான தீனதயாள் உபாத்தியாய கௌசல்யா யோஜனா (DDU GKY) திட்டத்தின் கீழ் விண்ணப்பம் செய்துள்ள திட்ட செயல்பாட்டு நிறுவனங்களின் (PIAs) கருத்துருக்களை மதிப்பீடு செய்யும் நிகழ்வு இரண்டாம் கட்டமாக 22.05.2017 முதல் 26.05.2017 வரை, காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலை நகரில் அமைந்துள்ள மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தில் (SIRD) நடைபெற்றது.

இந்நிகழ்வினை ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குநர் (திறன் வளர்ப்பு) திருமதி. சுஜாதா ஜேக்கப் அவர்கள் துவக்கி வைத்து, இந்நிகழ்வின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார்கள். தீனதயாள் உபாத்தியாய கௌசல்யா யோஜனா திட்டத்தின் மாநில திட்ட மேலாளர் / இணை இயக்குநர் திரு. சி. கே. வீரணன் அவர்கள், தீனதயாள் உபாத்தியாய கௌசல்யா யோஜனா திட்டத்தின் வழிகாட்டி நெறிமுறைகளின்படி திட்ட செயல்பாட்டு நிறுவனங்களின் (PIAs) கருத்துருக்களை மதிப்பீடு செய்யும் வழிமுறைகள் குறித்து விளக்கிக் கூறினார்.

இந்நிகழ்வின் ஒருபகுதியாக 23.05.2017 அன்று, சென்னை, மீனம்பாக்கத்தில் அமைந்துள்ள ரேடிசன் ப்ளு ஹோட்டலில் நடைபெற்ற, செயல்பாட்டு நிறுவனங்கள் மற்றும் இயக்க அலுவலர்களின் ஒருநாள் கருத்துப் பட்டறையினை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. வே. சாந்தா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று துவக்கி வைத்து சிறப்பித்தார்கள்.

இந்தக் கருத்துப் பட்டறையில் திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீட்டு செயல்முறைகள் மற்றும் SAGARMALA DDU GKY பயிற்சி திட்டம் குறித்தும் விளக்கப்பட்டது. DDU GKY-ன் இயக்குநர் திரு. அனில் சுப்ரமணியன் அவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

மேலும் கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சகத்தின் அலுவலர் திரு. சாரதா பிரசாத் அவர்கள் SAGARMALA DDU GKY திட்டம் குறித்து இந்தக் கருத்துப் பட்டறையில் விளக்கமாக உரையாற்றினார்.

அதைத் தொடர்ந்து மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகத்தின் அலுவலர் திரு. அனிஸ் அவர்களும், NIRD & PR (CTSA) திட்ட மேலாளர் திரு. சந்தோஷ் அவர்களும் திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீட்டு செயல்முறைகள் குறித்தும், அதற்கான காரணிகள் குறித்தும் தெளிவாக விளக்கமளித்தனர்.

இந்த நிகழ்வில் கரூர், வேலூர், மதுரை மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களின் மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் மாநில இயக்க மேலாண்மை அலகின் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

தனியார் நிறுவனங்களில் பணியாற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு முகாம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், படித்த இளைஞர்களுக்கு பல்வேறு தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டு, அவர்கள் சுய தொழில் மேற்கொள்ள வாய்ப்புகள் ஏற்படுத்தித் தருவதுடன், தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்புகளும் பெற்றுத் தரப்படுகிறது. அதன்படி தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் தனியார் நிறுவனங்களில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புப் பெற்றுத் தர ஏதுவாக தொடர்ச்சியாக வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. இந்த முகாம்களில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் செயல்படும் தனியார் நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு, தங்கள் நிறுவனங்களுக்கு ஏற்ற பணியாளர்களை தேர்வு செய்கின்றனர். இதன் பலனாக தற்போது படித்த இளைஞர்கள் பல்லாயிரம் பேர் வேலைவாய்ப்பு பெற்று வருகின்றனர்.

வேலூர் மாவட்டம்

வேலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், குடியாத்தம், திருவள்ளுவர் உயர்நிலைப் பள்ளியில் தொழிற் பயிற்சியுடன் கூடிய வேலை வாய்ப்பு முகாம் வேலூர் மாவட்ட ஆட்சியர் திரு. ச. அ. ராமன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் திரு. கே. சி. வீரமணி அவர்கள், இந்த வேலை வாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு வேலை வாய்ப்பு பெற்ற 566 இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி சிறப்பித்தார்.

முன்னதாக ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஆ. ரா. சிவராமன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். இந்த வேலைவாய்ப்பு முகாமில் 39 தொழில் நிறுவனங்களும், 3502 இளைஞர்களும் கலந்து கொண்டனர். முகாமில் உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

திருவள்ளூர் மாவட்டம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், திருவள்ளூர், திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி அரசினர் கலைக் கல்லூரியில் 20.05.2017 அன்று நடைபெற்ற வேலை வாய்ப்பு முகாமினை திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திருமதி. எ. சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். அரக்கோணம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கோ. அரி அவர்களும், திருத்தணி சட்ட மன்ற உறுப்பினர் திரு. பி. எம். நரசிம்மன் அவர்களும், வேலை வாய்ப்பு முகாமில் பணி வாய்ப்பு பெற்றவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினர்.

1750 இளைஞர்கள் கலந்து கொண்ட இந்த முகாமின் நிறைவாக திருவள்ளூர் மாவட்ட வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திருமதி. பா. கிருஷ்ணம்மாள் அவர்கள் நன்றியுரை நல்கினார். இம்முகாமில் உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

விழுப்புரம் மாவட்டம்

விழுப்புரம் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் செஞ்சி, ஆலம்பூண்டி ஸ்ரீ ரங்கபூபதி பொறியியல் கல்லூரி ஆகியவை இணைந்து நடத்திய வேலை வாய்ப்பு முகாமினை 06.05.2017 அன்று விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் முனைவர். இல. சுப்பிரமணியன், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார், விழுப்புரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் திரு. சு. சுந்தரராஜன் அவர்கள், வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து விளக்கவுரையாற்றினார்.

இந்த வேலைவாய்ப்பு முகாமில் 70 தனியார் தொழில் நிறுவனங்களும், 3137 வேலை நாடுனர்களும் கலந்து கொண்டதில், 953 நபர்கள் பல்வேறு தனியார் தொழில் நிறுவனங்களின் பணிக்குத் தேர்வு செய்யப்பட்டு, அவர்களில் 741 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன. இம்முகாமில் உதவித் திட்ட அலுவலர்கள் திரு. இரா. கமல்ராஜ், திரு. ப. குணசேகர், திரு. எம். திருநாவுக்கரசு, திரு. ச. ரமேஷ்பாபு, திருமதி. வே. சித்ரா, திரு. அ. முத்துப்பாண்டி உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

கேரட் – பீட்ரூட் ஜூஸ்

மாலையில் பள்ளி முடிந்தவுடன் சோர்வாக வரும் குழந்தைகளுக்கு புத்துணர்ச்சியூட்டும் வண்ணம் ஜூஸ் ஏதாவது கொடுக்க நினைத்தால், கேரட் பீட்ரூட் ஜூஸ் செய்து கொடுங்கள். இரத்த சோகை ஏற்படாமல் தடுக்கும் இந்த ஜூஸை குழந்தைகள் விரும்பிக் குடிப்பார்கள்.

ஜூஸ் செய்ய தேவையான பொருட்கள்

சிறிய கேரட் – 3, சிறிய பீட்ரூட் – 1, இஞ்சி – 1/4 இஞ்ச், தண்ணீர் – 1/4 கப், ஐஸ் கட்டிகள் – சிறிது, சர்க்கரை – 2 டேபிள் ஸ்பூன், எலுமிச்சை சாறு – 1 டீஸ்பூன்.

செய்முறை

முதலில் கேரட் மற்றும் பீட்ரூட் மற்றும் இஞ்சி ஆகியவற்றின் தோலை உரித்து, சிறு சிறு துண்டுகளாக நறுக்கி, அதனை மிக்ஸியில் போட்டு, அத்துடன் சர்க்கரை, ஐஸ் கட்டிகள் போன்றவற்றை சேர்த்து, நன்கு மென்மையாக அரைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் அதனுடன் தண்ணீர் ஊற்றி, மேலும் நன்றாக அரைத்து, அதனை வடிகட்டிக் கொள்ள வேண்டும். பிறகு அதில் எலுமிச்சை சாறு சேர்த்து கலந்தால் சுவையும், ஆரோக்கியமும் நிறைந்த கேரட் பீட்ரூட் ஜூஸ் தயார். ■

முருங்கைப் பூவின் நன்மைகள்

அதிக நேரம் கம்ப்யூட்டரைப் பார்த்துக் கொண்டு வேலை செய்வதாலும், வீடுகளில் தொலைக்காட்சியினை பார்ப்பதாலும் கண்களுக்கு ஓய்வு கொடுப்பதில்லை. இதனால் கண்கள் விரைவில் வறண்டு விடுகின்றன. கண் இமைகள் சிமிட்டும் தன்மையும் குறைந்து விடுவதால், தலைவலி, பார்வை மங்கலாகுதல் போன்றவை ஏற்படுகிறது. இக்குறை நீங்க முருங்கைப் பூவுடன் பசும்பால் சேர்த்து நன்றாகக் காய்ச்சி காலை மாலை என இருவேளை அருந்தி வந்தால் கண்களில் ஈரப்பசை அதிகரித்து, கண் பார்வை கோளாறுகள் நீங்கும். 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கண்ணாடி இல்லாமல் பேப்பர் படிக்க முடியாது. இதை வெள்ளெழுத்து என்பார்கள். இவர்கள் முருங்கைப்பூவை நிழலில் உலர்த்தி, பொடி செய்து தேன் கலந்து சாப்பிட்ட வந்தால் வெள்ளெழுத்தும், கண்ணில் தோன்றும் வெண்படலமும் மாறும். ■

சமையலறையில் இருக்கும் அழகுப் பொருட்கள்

பொதுவாக பழங்கள், காய்கறிகள், மூலிகைகள் மற்றும் பால் பொருட்கள் அனைத்தும் சாப்பிடுவதற்கு மட்டுமல்லாது, சருமத்திற்குப் பொலிவைத் தரும் அழகுப் பொருட்களாகவும் பயன்படுகின்றன. சமையலறையில் உள்ள அத்தகையைப் பொருட்கள் என்னவென்று பட்டியலிட்டுள்ளோம். அதை படித்து தெரிந்து கொண்டு, வீட்டிலேயே சருமத்தை அழகாகப் பராமரிக்கலாம்.

மஞ்சள் – மஞ்சளில் ஆண்டிசெப்டிக் பொருள் அதிகமாக உள்ளது. இதனைக் கிரிமிநாசினிப் பொருள் என்றும் சொல்லலாம். எனவே மஞ்சளைப் பயன்படுத்தினால் சருமத்தில் ஏற்படும் சரும நோய்கள் மற்றும் கருமையான திட்டுக்களைப் போக்கலாம்.

தக்காளி – தக்காளியில் சிட்ரஸ் உள்ளதால், இதனைப் பழுப்பு நிற சருமம் உள்ளவர்கள் பயன்படுத்தினால் பழுப்பு நிறம் நீங்கிவிடும்.

பால் – நிறைய அழகு சிகிச்சைகளில் பயன்படுத்தும் பொருளாக பால் உள்ளது. வறட்சியான சருமம் உள்ளவர்கள் பாலை பயன்படுத்தினால், சருமம் பளபளப்பாகவும், பட்டு போன்றும் மின்னும்.

உப்பு – ஸ்கிரப் போன்று உப்பை பயன்படுத்தலாம். இதனால் சருமத்தில் உள்ள இறந்த செல்களைப் போக்கி விடுவதோடு, சருமத்தில் உள்ள சத்துக்களைத் தக்க வைக்கலாம்.

வெங்காயம் – ஜிங்க் ஒரு ஆண்டி பாக்ட்ரியல் பொருள். இது அதிகம் வெங்காயத்தில் உள்ளதால், சருமத்தில் ஏற்படும் நோய்களைத் தடுக்க வெங்காயம் அதிகம் சாப்பிட வேண்டும்.

சர்க்கரை – உப்பு போன்றே சர்க்கரையையும் ஸ்கிரப்பாக பயன்படுத்தலாம். வீட்டிலேயே செய்யும் பேசியலுக்கு சர்க்கரையைப் பயன்படுத்தலாம்.

எலுமிச்சை – சிட்ரஸ் ஆசிட் உள்ள பழங்களில் எலுமிச்சை பழம் சருமத்திற்கு மிகுந்த பயனைத் தரும். சரும நோய்கள் மற்றும் பழுப்பு நிற சருமத்தைப் போக்க எலுமிச்சைப் பயன்படுகிறது.

தயிர் – பால் பொருட்களில் ஒன்றாக தயிர் உள்ளது. புளிப்பான தயிரில் வைட்டமின் சி அதிகம் இருக்கும். ஆகவே சருமதை ஈரப் பசையுடன் வைத்திருக்க தயிர் பயன்படுகிறது.

வெள்ளரிக்காய் – குளிர்ச்சித் தன்மை அதிகம் உள்ள வெள்ளரிக்காய் துண்டுகளை கண்களில் வைத்தால், கண்கள் குளிர்ச்சியடைவதோடு, புத்துணர்ச்சியுடனும் இருக்கும். மேலும் கண்களைச் சுற்றி கருவளையங்கள் மற்றும் சுருக்கங்கள் வராமல் தடுக்கும். ■

வங்கிக் கடன் இணைப்பு மற்றும் தகவல் பரிமாற்றம் குறித்த விளக்கக் கூட்டம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் வங்கிக் கடன் இணைப்புகள், தகவல் பரிமாற்றங்கள் மற்றும் குழுக்களுக்கான வட்டி மானியம் குறித்து, பொதுத்துறை வங்கிகள், தனியார் வங்கிகள் மற்றும் மாவட்ட கூட்டுறவு வங்கிகளின் அலுவலர்கள் கலந்து கொண்ட விளக்கக் கூட்டம் 12.06.2017 அன்று சென்னையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் திரு. லோகேஷ் (இயக்க மேலாளர், தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம், புதுடெல்லி) அவர்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குநர் திரு. பா. செல்வராஜன் அவர்கள், கூடுதல் இயக்குநர் / தமிழக முதலமைச்சரின் தனிப்பிரிவு அலுவலர் திரு. ஜே. கணேஷ் கண்ணா அவர்கள், இணை இயக்குநர் (பொறுப்பு) திரு. ஜி. சீனிவாசராவ் அவர்கள், தேசிய வள ஆலோசகர் (நிதி உள்ளாக்கம்) திரு. ராஜன் பாபு அவர்கள், மக்கள் தொடர்பு அலுவலர் திரு. சு. மகேஷ்வரன் அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இக்கூட்டத்தைத் தொடர்ந்து 13.06.2017 அன்று காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கியில் நடைபெற்ற கூட்டத்தில், திரு. லோகேஷ் (இயக்க மேலாளர், தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம், புதுடெல்லி) அவர்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் ஆலோசகர் (நிதி உள்ளாக்கம்) திரு. திருநாவுக்கரசு அவர்கள், காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. சரஸ்வதி கணேசன் அவர்கள் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட கூட்டுறவு வங்கியின் பொது மேலாளர், உதவி பொது மேலாளர், அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி மையம் திறப்பு

காஞ்சிபுரம் மாவட்டத்தில், இந்தியன் வங்கி, காஞ்சிபுரம் மைக்ரோ சாட் கிளையில் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி மையத்தினை 29.05.2017 அன்று காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திரு. பி. பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்து, பயிற்சி முடித்த நபர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. சரஸ்வதி கணேசன் அவர்கள், முன்னோடி வங்கி மேலாளர் திரு. முஜ்பீர் ரஹ்மான் அவர்கள், ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி மையத்தின் இயக்குநர் திரு. பத்ரிநாத் அவர்கள், இந்தியன் வங்கி மைக்ரோ சாட் கிளை மேலாளர் மற்றும் மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

காஞ்சிபுரம் மாவட்டம்

வளம் தந்த வாழ்வாதார இயக்கம்

ஈரோடு மாவட்டம், அம்மாப்பேட்டை வட்டாரம், பட்லூர் ஊராட்சியில் உள்ள சொக்கநாதர் மலையூர் குக்கிராமத்தில் வசித்து வரும் திருமதி. திலகமணி மிகவும் ஏழை குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரது கணவர் கூலி வேலை செய்கிறார். இவர்களுக்கு மூன்று பெண் குழந்தைகள் உள்ளனர். மிகவும் குறைவான வருவாயில் ஏழ்மை நிலையில் வசித்து வந்தார் திருமதி. திலகமணி. இந்நிலையில் இப்பகுதியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம் மக்கள் நிலை ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, நலிவுற்றோர் பட்டியலில் திலகமணியின் குடும்பமும் இணைக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து அப்பகுதியில் சுய உதவிக் குழுக்களில் இணையாத பெண்களைக் கொண்டு, ஸ்ரீ ராஜ கணபதி மகளிர் சுய உதவிக் குழு துவங்கப்பட்டது. அதில் திலகமணி உறுப்பினராக சேர்க்கப்பட்டார்.

இவருக்கு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின்படி சிறப்பு ஒருங்கிணைப்புத் திட்டம் மூலமாகவும், பட்லூர் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மூலமாகவும், தமிழ்நாடு அரசின் விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தின் மூலம் நான்கு வெள்ளாடுகள் பெற்றுத் தரப்பட்டது. மேலும் ஆடுகளைப் பராமரிக்க அமைவிடம் அமைக்க ரூ. 2,000/–மும் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டது.

தற்போது நான்கு ஆடுகள் 13 ஆடுகளாக பெருகியுள்ளன. ஆடுகளை விற்பனை செய்வதின் மூலம் தொடர்ந்து கணிசமான வருவாய் திலகமணிக்கு கிடைத்து வருகிறது. தற்போது தனது குடும்பம் வறுமையில் இருந்து மீண்டுள்ளதாகக் கூறும் திலகமணி, தனக்கு வளமான வாழ்வை ஏற்படுத்திக் கொடுத்த தமிழக அரசிற்கும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கும், தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார். ■

ஈரோடு மாவட்டம்

வாழ்வாதார இயக்கத்திற்கு நன்றி

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படும் வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றியம், தம்மாண்டரப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த திரு. இரவி – ஜோதி ஆகியோரின் 10 வயது மகள் சிறுமி இலட்சுமி என்பவருக்கு இதயத்தில் அடைப்பும் துவாரமும் ஏற்பட்டிருந்தது. அதனை சரி செய்ய தனியார் மருத்துவமனையில் ரூ. 3,50,000/– செலவாகும் என்று கூறப்பட்டது. சிறுமி இலட்சுமியின் குடும்பம் மிகவும் ஏழ்மையானது என்பதால் மருத்துவ சிகிச்சை மேற்கொள்ள இயலாத நிலை இருந்தது.

அச்சமயத்தில் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் களப்பகுதி பணியாளர் திருமதி. சரிதா அவர்கள் தகவல் தந்தததின் அடிப்படையில், கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் அவர்களின் பரிந்துரையின்படி, யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்தில் காப்பீடு ஆலோசகராக பணிபுரியும் திரு. மு. இரவிச்சந்திரன் அவர்கள் மூலம் புதுச்சேரி மாநிலம், கோரிமேட்டில் இயங்கி வரும் ஜிப்மர் மருத்துவமனையில் முற்றிலும் இலவசமாக சிறுமி இலட்சுமிக்கு மருத்துவ சிகிச்சை செய்யப்பட்டு, அவருடைய இதயத்தில் ஏற்பட்டிருந்த பிரச்சனைகள் சரிசெய்யப்பட்டு, தற்போது சிறுமி இலட்சுமி தற்போது நலமாக இருக்கிறார்.

தங்கள் மகள் இலட்சுமியின் மருத்துவ சிகிச்சைக்கு வழி ஏற்படுத்திக் கொடுத்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு சிறுமி இலட்சுமியின் பெற்றோர்கள் தங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர். ■

கிருஷ்ணகிரி மாவட்டம்

கோடை விழாவில் நலத்திட்ட உதவிகள்

திருவண்ணாமலை மாவட்டம்

திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையில் 17.06.2017 மற்றும் 18.06.2017 ஆகிய இரண்டு தினங்கள் 20வது கோடை விழா நடைபெற்றது. இவ்விழாவில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் வாழ்வாதார மேம்பாடு அடையும் பொருட்டு, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மூலம் பகுதி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு நேரடி கடன் மற்றும் சுழல் நிதி வழங்கப்பட்டது.

இவ்விழாவில் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன் அவர்களும், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. வெல்லமண்டி என். நடராஜன் அவர்களும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. செல்லூர் கே. ராஜு அவர்களும், வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மேலும் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் திரு. பிரசாந்த் மு. வடநேரே, இ.ஆ.ப., அவர்கள், திருவண்ணாமலை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திருமதி. பா. ஜெயசுதா அவர்கள் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள், திட்டப் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

முற்றம் இதழ்

சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை அறிந்திட முற்றம் படியுங்கள்!
முற்றம் மேலும் மேலும் வளர்ந்திட
உங்களின் ஆதரவை தாருங்கள்! முற்றத்திற்கு சந்தா செலுத்திடுங்கள்!!

முற்றம் இதழின் சந்தா விபரம்

ஒரு ஆண்டு சந்தா	ரூ. 180/-
இரண்டு ஆண்டு சந்தா	ரூ. 360/-
மூன்று ஆண்டு சந்தா	ரூ. 540/-

விளம்பரக் கட்டணம்

அட்டையில்	ரூ. 75,000/-
அட்டையின் 2வது பக்கம்	ரூ. 50,000/-
அட்டையின் 3வது பக்கம்	ரூ. 50,000/-
அட்டையின் பின்பக்கம்	ரூ. 50,000/-
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 35,000/-

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை 'முற்றம்' (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

தினம்... தினம்...

உலக மருத்துவர்கள் தினம் - ஜூலை 1

1962ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் நாள் தன்னுயிர் நீத்த பிதான் சந்திர ராயின் நினைவாக ஆண்டுதோறும் தேசிய மருத்துவர் தினம் கடைபிடிக்கப்படுகிறது.

மனிதர்களுக்கு ஏற்படும் நோய்களை போக்கி, அவர்களுக்கு வாழ்வளிக்கும் உன்னத சேவையினை ஆற்றுபவர்கள் மருத்துவர்களின் சேவையைப் பெருமைப்படுத்தும் வண்ணம் வருடந்தோறும் ஜூலை மாதம் 1ஆம் தேதி உலக மருத்துவர் தினமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்தியாவில் இந்த தினம், வங்காளத்தை சேர்ந்த மருத்துவர் பிதான் சந்திரராய் அவர்களின் நினைவாக தேசிய மருத்துவர் தினமாக அனுசரிக்கப்படுகிறது. பிதான் சந்திரராய், மேற்கு வங்க மாநிலத்தில் 1882ஆம் ஆண்டு ஜூலை மாதம் பிறந்தார். கல்கத்தா மருத்துவக் கல்லூரியில் ஒரே நேரத்தில் மருந்தியல் மற்றும் அறுவை மருத்துவத்திற்கான எம்.ஆர்.சி.பி. மற்றும் எஃப்.ஆர்.சி.எஸ். படிப்புகளை இரண்டாண்டுகள் மூன்று மாதங்களிலேயே படித்து முடித்து சாதனை புரிந்தவர்.

சிறந்த மருத்துவராகவும், விடுதலை இயக்க போராளியாகவும் திகழ்ந்த ராய், மேற்கு வங்காளத்தின் இரண்டாவது முதலமைச்சராக, 1948 முதல் 1962ஆம் ஆண்டு வரை 14 ஆண்டுகள் பதவி வகித்தார். வங்காளத்தின் வளர்ச்சிக்கு பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தியவர். ■

சர்வதேச கூட்டுறவு தினம் - ஜூலை 1

ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதத்தின் முதலாவது சனிக்கிழமை சர்வதேச கூட்டுறவு தினம் கடைபிடிக்கப்படுகிறது. நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சியில் கூட்டுறவுத் துறை முக்கிய இடம் வகிக்கின்றது. இன்றைய உலகம் சமூக, பொருளாதார மாற்றங்களுடன் கூட்டுறவின் தேவையை உணர்ந்தே உள்ளது.

இந்தியாவின் வளர்ச்சிக்கு கூட்டுறவுத் துறை ஒரு முக்கிய காரணமாக திகழ்ந்தது. இந்திய விடுதலைக்கு முன்பே, 1904ஆம் ஆண்டு தற்பொழுதுள்ள திருவள்ளூர் மாவட்டத்தில் திரூர் என்ற கிராமத்தில் கூட்டுறவு சங்கம் இந்தியாவிலேயே முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது.

இன்றைக்கு கூட்டுறவு அமைப்பு சகல துறைகளிலும் இயங்கி வருகிறது. விவசாயிகள், நெசவாளர்கள், பால் உற்பத்தியாளர்கள், கால்நடைகள் வளர்ப்போர், கரும்பு உற்பத்தியாளர்கள், வீட்டு வசதி, கதர், கிராமத் தொழில், தொழிலாளர்கள், மீனவர்கள், மகளிர் என அனைத்துத் தரப்பினரும் தங்களுடைய நலன், பாதுகாப்பு கருதி தங்களுக்கு தாங்களே கூட்டாக, உறவாக அமைப்புகளை உருவாக்கி வருகின்றனர்.

கிராமப்புறங்கள் முதல் நகர்ப்புறங்கள் வரை உள்ள பல ஆயிரம் கூட்டுறவு அமைப்புகளின் செயல்பாடுகள் ஜனநாயகத்திற்கு வலிவு சேர்க்கின்றன. ■

உலக மக்கள் தொகை நாள் - ஜூலை 11

மக்கள் தொகை குறித்த விழிப்புணர்வை உலகளாவிய அளவில் மக்களுக்கு எடுத்துச் செல்லும் வகையில் ஐக்கிய நாடுகள் சபை ஆண்டுதோறும் ஜூலை மாதம் 11ஆம் தேதியை உலக மக்கள் தொகை நாளாக அனுசரிக்க உலக நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்தது.

மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்திட பல்வேறு திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி எளிய மக்கள் மத்தியில் குடும்ப நலத் திட்டமிடல்கள் பற்றிய கருத்தரங்குகள், பாதுகாப்பான கருத்தடை முறைகள் பற்றிய விழிப்புணர்வை ஊடகங்கள் மூலம் மக்கள் மத்தியில் ஏற்படுத்துதல் போன்றவை சிறப்பான பலனை தரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் பள்ளிகளில் மக்கள் தொகைக் கல்விக்கு முக்கியமளிப்பதுடன், மக்கள் தொகைப் பெருக்கத்தினால் ஏற்படும் சமூகப் பொருளாதார தாக்கங்கள் பற்றிய செயல்பாடுகளை மேற்கொள்வது அவசியமாகிறது. ■

முழு சுகாதார தமிழகம் முன்னோடி தமிழகம்

களப்பணியின் குரல்கள்

திருவண்ணாமலை மாவட்டம், கலசபாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையை உருவாக்கிட ஊக்குநர்களுக்கு பயிற்சி 4.4.2017 அன்று வழங்கப்பட்டது

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பள்ளி மாணவர்கள் "முழு சுகாதார தமிழகம் முன்னோடி தமிழகம்" உறுதிமொழி அளிக்கப்பட்டது. நாள்: 5.4.2017

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அங்கன்வாடி பணியாளர்களுக்கு சுகாதார விழிப்புணர்வு நிகழ்ச்சி 5.4.2017 அன்று நடத்தப்பட்டது.

ஊக்குநர்கள் காலை நேரத்தில் பின் தொடர்ந்து திறந்தவெளியில் மலம் கழித்தலை தடுக்கின்றனர். இடம் : வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம் நாள்: 8.4.2017.

மதுரை மருத்துவக் கல்லூரி ஐ.எம்.ஏ. கூட்ட அரங்கில் தூய்மை பாரத இயக்கத்தின் கீழ் நடைபெற்ற கனவு மெய்ப்படல் நிகழ்ச்சியில் திறந்தவெளி மலம் கழித்தலற்ற நிலையைக் கண்டறியும் காற்றழுத்த மானியினை (Barometer) மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. கொ. வீரராகவ ராவ் இ.ஆ.ப., அவர்கள் 7.4.2017 அன்று அறிமுகப்படுத்தினார்கள்
இடம்: மதுரை மாவட்டம்.

களப்பணியின் குரல்கள்

தமிழ்நாடு தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை செயலர் திருமதி. பெ. அமுதா, இ.ஆ.ப., பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் மற்றும் பெரம்பலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஆகியோர்கள் தலைமையில் சுகாதார உறுதிமொழி பயிற்சியாளர்களுடன் பயிற்சி நேரத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.
நாள்: 8.4.2017 இடம்: பெரம்பலூர் மாவட்டம்.

தூய்மை பாரத இயக்க திட்டத்தின் கீழ் 2016–17ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்ட தனிநபர் இல்லக் கழிப்பறைகளை ஜியோடேகிங் (Geo Tagging) மூலம் புகைப்படம் எடுத்து இணையதளத்தில் பதிவேற்றம் செய்வது குறித்த பயிற்சி “முழு சுகாதார தமிழகம் முன்னோடி தமிழகம்” உறுதிமொழியுடன் திருநெல்வேலி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தலைமையில் தொடங்கப்பட்டது.
இடம் : திருநெல்வேலி மாவட்டம் நாள்: 11.4.2017

கோட்டையூர் கிளஸ்டர் அலுவலகம், மகமை அமைப்பு மற்றும் அனைத்து ஊக்குவிப்பாளர்களுக்கு வட்டார அளவிலான கைகழுவும் பயிற்சி 12.4.2017 அன்று விருதுநகர் மாவட்டம், வத்தாரயிருப்பு ஊராட்சி ஒன்றியத்தில் வழங்கப்பட்டது.

திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தூய்மை காவலர்கள் மற்றும் பணித்தளப் பொறுப்பாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. நாள்: 13.4.2017
இடம்: திண்டுக்கல் மாவட்டம், வேடச்சந்தூர் ஒன்றியம்.

திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம், கோவிந்தபுரம் கிராம ஊராட்சியில் கழிப்பறை பயன்பாடு பயிற்சி மற்றும் ஸ்கோப் இயக்குநர் தலைமையில் 70 தாய்மார்களுக்கு பொட்டிகள் (Potties) வழங்கப்பட்டது. நாள்: 14.4.2017

களப்பணியின் குரல்கள்

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டாரம், தேனாடு ஊராட்சி கூட்டமைப்பு கூட்டத்தில் தனிநபர் இல்லக் கழிப்பறை அவசியம் பற்றியும், திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற நிலையின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தனர். அத்துடன் "முழு சுகாதார தமிழகம் முன்னோடி தமிழகம்" உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். நாள்: 15.4.2017

திண்டுக்கல் மாவட்டம், செட்டியார் சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தூய்மை காவலர்கள் மற்றும் பணித்தளப் பொறுப்பாளர்களுக்கு ஒருநாள் பயிற்சி 17.4.2017 அன்று அளிக்கப்பட்டது.

திருவண்ணாமலை மாவட்டம், மேற்கு ஆரணி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள குன்னத்தூர் இந்து பி.யூ.இ (PUE) பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) பற்றிய விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது. நாள்: 17.4.2017

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளவர்களுக்கு சமூக வரைபடம் மூலம் தூண்டுதல் விளக்கம் வழங்கப்பட்டது. நாள்: 17.4.2017.

திண்டுக்கல் மாவட்டம், பழனி ஊராட்சி ஒன்றியத்தில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தூய்மை காவலர்கள் மற்றும் பணித்தளப் பொறுப்பாளர்களுக்கு பயிற்சி 18.4.2017 அன்று வழங்கப்பட்டது.

அந்தக் கிராமத்தின் பஞ்சாயத்து தலைவர் அருள்நிதியின் வீடு.
அப்ப நீங்க!?
வாங்க நர்ஸம்மா... ஆளே பார்க்கமுடியல!
ம்ம்..எப்படி இருக்கீங்க?
என்ன... ரொம்ப யோசனையா இருக்கீங்கபோல..
வாங்க.. டேப் ஒண்ணு வாங்கலாம்னு இருக்கேன்!
பட்டணத்துக்கு வரும் எந்த புதுப்பொருளையும் உடனே வாங்கிவிடுவார் அருள்நிதி.
ஆமா... போன்,டேப்லெட்டுன்னு வாங்கி வாங்கி காசைப் பாழாக்குறதுதான் இவர் வேலை!
வாங்கினா நம்ம பாவைக்கும் பயன்படும்ல..
ஆமா.. இங்க கழிப்பறை எங்க இருக்கு?
கழிப்பறையா..? கிராமத்துல போயி கழிப்பறை கேக்கறீங்களே!
ஏன்... டேப் வரைக்கும் வந்துட்ட கிராமத்துல கழிப்பறை வராதா?!
பக்கத்துலயே தோட்டமும் கம்மாக்கரையும் இருக்கும்போது கழிப்பறை எதுக்கு?
அப்படியில்லை.. அது எங்களுக்குப் பழக்கமில்லையே! அதுமட்டுமில்ல.. திறந்தவெளிதானே வசதியாவும் இருக்கும்.


திறந்தவெளியைப் பயன்படுத்தறதுதான் சுற்றுப்புறமும் பாழாகி, நம்ம சுகாதாரமும் கெட்டு பல நோய்கள் வரக் காரணமாகுது.
கழிப்பறை பயன்படுத்தறதுதான் ஆரோக்கியம். நம்ம வருங்கால சந்ததிக்கும் பாதுகாப்பு!
அப்போது பள்ளிக்கூடம் விட்டு வந்தாள் அருள்நிதியின் மகள் பாவை.
என்ன செல்லம்.. சோகமா இருக்கே?
போங்கப்பா.. பஞ்சாயத்து தலைவர் வீட்லயே கக்கூஸ் இல்லையான்னு எல்லாரும் என்னைக் கிண்டல் பண்றாங்க!
நம்ம வீட்ல கக்கூஸ் கட்டுனாத்தான் நான் இனிமே ஸ்கூலுக்கே போவேன்!
சரிடா செல்லம்.. உடனே கழிப்பறை கட்டுவோம். நாங்க எங்கள மாத்திக்கிறோம்
நர்ஸ் அக்கா சொன்ன மாதிரி...
நம்ம எல்லாரோட ஆரோக்கியத்துக்காகவும் உடனே கழிப்பறை கட்டற வேலையைத் தொடங்கறேன்...சரியா!
ஆமா! நாங்க கழிப்பறை கட்டப் போறோம். அப்ப நீங்க?!
ஹைய்யா.. நாங்க கழிப்பறை கட்டப் போறோம்!!

நலம் நாடும் நல் இல்லம்...!

(கழிப்பறை குறித்த கட்டுரைப் போட்டியில் தேர்வு செய்யப்பட்ட கட்டுரை)

'நூறாண்டு வாழினும், நோயின்றி வாழ்தலே சிறப்பு. வாழினும் வாழாது வாழ்வதை விட, சாகினும் சால் கொடும் நோயின்றி வாழ்தலே வாழ்வு' என்பார்கள் முன்னோர்.

'இல்லத்தில் இல்லம்! இனிமையாய் அமைதி நிலவ,
கழிப்பறையும், கழிவு கால்வாயும் அவசியம்'

தேவையற்ற, வீணாகும் கழிவுகளை குப்பையில் கொட்டி, குளம் போல் கழிவு நீரை தேங்க விடாமல், நோயின் கருவறையாக மாற்றாமல், குட்டையாக தேங்கும் நீரை குளிர்ச்சி தரும் மரங்களில் விட்டு, வீசுகின்ற காற்றினை விஷ வாயுக்களாக மாற்றாமல், தேங்கிய கழிவுகள் தேவையற்றவையாய் மாற்றி, தீமை விளைவிக்க ஊக்குவிக்கும் புழுக்களையும், கொசுக்களையும், கொடூரம் தரும் நோய் கிருமிகளையும் வளர்த்துக் கொடுக்கும் கருவறை இல்லமாய் நாம் மாற்றாமல், நலம் நாடும் நல் இல்லம் அமைப்பதாய் சபதமேற்போம்.

'சுவஸ்த் பாரத்' என்ற பிரதமரின் தூய்மையான இந்தியாவையும், கழிவுகளை தேக்கி, திறந்தவெளிக் கழிப்பறையாக மாற்றி, நாசம் செய்யும் விஷப் பூச்சிகளை உருவாக்காமல், மறைமுக, மறைக்கப்பட்ட, சுத்தமான, சுகாதாரமான 'தூய்மையே தாய்மை நலமென' சிந்தித்து, கழிப்பறையை அமைத்து, 'நம்மை மட்டும் நலமாய் இருக்கும் நிலை மாற்றி'. நாட்டையே நல்வழி சுகாதாரமாய் மாற்ற, தனி முயற்சிதனை தலைமேல் கொண்டு, என்னையும், என் இல்லத்தையும் தூய்மையாக எண்ணாமல், பிரதமரின் தூய்மை திட்டமாய் 'தூய்மை இந்தியா' திட்டத்தில் நாமும் சேர்ந்து, பெரியோர்களின் பொன் மொழியைப் பின்பற்றி,

'உன்னை தூய்மைப்படுத்தினால்
உன் உடல் நலம் பெறும்;

உன் இல்லம் தூய்மைப்படுத்தினால்
உன் குடும்பம் நலம் பெறும்;

உன் தெருவைத் தூய்மைப்படுத்தினால்
சமுதாயம் நலம் பெறும்;

உன் ஊரும், நகரமும் தூய்மையானால்
எளியோரும் நலம் பெறலாம்;

உன் நாடு தூய்மையானால்,
வரும் சந்ததியினரே நலம் பெறும்.

என்ற பொன்மொழிக்கேற்ப, உன் தூய்மையே உலக நன்மை நலம் தரும் என்று 'வாழு இல்லாயின் வாழ விடு' என்ற மொழிக்கேற்ப 'செய் அல்லது செய்து மடி', அதையே காந்தியடிகள் `Do or Die' என்றார். இன்று நாம் செய்ய தவறினால், வரும் சமுதாயம் செத்து மடிவது நோயின் பிடியில் என்று மறைமுகமாக கூறியுள்ளார் அன்றைய பெரியோர்.

ஆட்டுக் கழிவு, மாட்டுக் கழிவு என நாம் பயன்படுத்துகிறோம். ஆனால், மனிதக் கழிவோ நோயை பரப்புவதாய் அறிகிறோம்.

சுத்தமான இல்லக் கழிப்பறைகள் நலமாய் வாழ அமைப்பது அவசியம். இன்று மறந்தால் அல்லது மறுத்தால், நாளைய நம் இனமே நோயின் பிடியில். வளர்ச்சியற்ற மனநிலை, டெங்கு, சிக்கன் குனியா, மூளைக்காய்ச்சல், காலரா, கொள்ளை நோய்களைப் பரப்பும் பூச்சிகளுக்கும், கொசுக்களுக்கும் அடிமைப்பட்டு அவதியுறும் அடிமை நிலையை மாற்ற முற்படுவோம்.

'நன்மையும் தீமையும் பிறர் தர வாரா' என்பார்கள். நாம் செய்யும் செயலே நன்மையும் தீமையும் தீர்மானிக்கிறது. ஆடுகளும், மாடுகளும், பறக்கும் பறவைகளும் தான் பிறந்த காரணத்திற்காக, தான் உண்ணும் பழ விதைகளை ஆங்காங்கே எச்சங்களாய் விதைத்து, எதிர்கால சந்ததிகள் வாழ, சுற்றுப்புறச்சூழல் மாசைக் குறைக்க மரம் தரும், மரம் வளர்க்கும் மகத்தான சாதனை சேவைகளை செய்து வருகின்றன.

தாவரங்களோ, தன்னை வளர்த்த பூமித்தாய்க்கு, பழம், காய்கள், இலை மட்குகளான உரங்கள், தூய்மையான காற்று, சுவாசிக்க ஆக்ஸிஜன் என தன்னைத் தாங்கும் பூமிக்கும், தன்னை வளர்க்கும் மானிடருக்கும் சேவைகளைச் செய்து, இறுதியில் இறந்து வாடும் மனித ஜென்மங்களை ஈமக் கிரியை செய்யவும், உணவு சமைக்கவும், விறகாகவும், மரச் சாமான்களாகவும் நம் வாழ்வோடு வாழ்வாக நினைவுச் சின்னமாக வாழ்ந்து வருகிறது.

இப்படி மரங்களும், உணவுத் தாவரங்களும், விலங்குகளும், பிற உயிரினங்கள் கூட, தன் பிறந்த பூமிக்கு ஆதரவாய், ஆதாரமான மானிடருக்கு சேவையை செய்து மடிகின்றன. ஆனால், இத்தனை உயிரின சேவைகளையும் அனுபவித்து, பிற உயிருக்கு தீங்கையும் செய்து, பிறந்த பிறப்பை பயன்படுத்தாது, காரணமறியாமல் வாழும் மானிடராய் பிறந்தது நியாயமா ? நம்மை தூய்மைப்படுத்த நாமே முன்வராதது வெட்கக்கேடாய் விளைகிறது.

மண்ணும், விண்ணும், வானமும் இல்லமாய் கூரையின்றி, கிடைத்ததைத் தின்று வாழ்ந்த நம் முன்னோர்கள், உடல் உழைப்பாலும், உயர்ந்த தேக சுகமாய், கொசுத் தொல்லையின்றி, விஷப் பூச்சிகளின்றி எல்லோரும் சுகமாய் வாழ்ந்த காலம் 20ஆம் நூற்றாண்டில்தான்.

21ஆம் நூற்றாண்டில் இரண்டு உலகப் போர்கள், அணு ஆயுதப் புரட்சி, தீவிரவாதம் என எங்கும் நிம்மதி தொலைந்து, மன அமைதி இன்றி, விவசாயம் செய்வது நவீனம் என பூச்சிகளைக் கொல்ல பூச்சி மருந்துகள் பயன்படுத்தி, உணவெல்லாம் மருந்தாகி, விஷத்தை தின்னும் அவலம் இன்று.

பூச்சிகளை கொல்ல எண்ணும் மருந்து இன்று குழந்தைகள், இளம்பிள்ளை வாதம், இதய நோய் (Heart Attack) மரணம், கொழுப்பு, சர்க்கரை நோய், வாத நோயென வாழும் நிலை. மண்ணின் தரத்தைக் கொன்று, மண் புழுக்களை கொன்று விட்டு, மண்ணிற்கு உரம் போட்டு விவசாயம் செய்யும் அவலம்.

நம்மை நாமே தூய்மைப்படுத்த வேத கால, புராண கால பண்பாடும், நாகரீகம், கலாச்சாரம் என பின்னோக்கி நன்மையை தேடும், இயற்கை விவசாயமாக காண ஓடும் நாள் வந்து விட்டது.

எங்கும் மாசு, டெல்லியில் மாசு, பள்ளிக்கு விடுமுறை. சென்னையில் புயல், மற்றொரு புறத்தில் தமிழகத்தில் வறட்சி. இயற்கை தன்னை மாற்றி, மனிதனை தண்டிக்கும் மகாச்செயலை துவங்கி விட்டது.

தூய்மை இந்தியா, தாய்மையான பூமா தேவியை நாம் போற்றிக் காத்தால் சுகமாய் வாழ்வது மட்டுமல்ல, வரும் சந்ததிகளும், வாரிசுகளும் வாழ விடும் சிறந்த வழியாகும்.

'தூய்மையை, சுற்றுச்சூழலை பாதுகாக்க,

கழிப்பறைகள் அமைப்போம்!

திறந்தவெளி கழிப்பறைகள் ஒழிப்போம்!!'

நாம் வாழ, நாடு வாழ, நாளைய தலைமுறை வாழ, என்றும் சுகமாய் இனிமையாய் வாழ, சுத்தமான சுகாதாரமான கழிப்பறைகளும், கழிவு வாய்க்கால்களும் கொண்டு இல்லங்கள் அமைத்து, எங்கும், எப்பொழுதும், எல்லா நாளும், எல்லா மக்களும் இளமையாக வாழ, வழிகாட்டியாய் திகழ்வோம்.

வாழ்க தமிழ்நாடு!

– செல்வி. பி. கவிதா, XII B
அரசு உயர்நிலைப் பள்ளி,
மகாராஜபுரம்.

சேலம் மாவட்டம் ஊக்குனர்களுக்கு சுகாதார அணுகுமுறைகளான திறன் வளர்ப்பு பயிற்சி, காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலை நகரில் உள்ள மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் மற்றும் பஞ்சாயத்து ராஜ்–ல் 13.06.2017 முதல் 17.06.2017 வரை நடைபெற்றது.

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம், வாரணவாசி கிராம ஊராட்சியில் கிராம சமூகத்துடன் முன்கூட்டியே தூண்டுதல் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

தூண்டுதல் நிகழ்ச்சிக்குப் பிறகு பயிற்றுநர்களுடன் கிராம அனுபவங்களைப் பற்றிய கலந்துரையாடல் நடத்தப்பட்டது.
இடம்: மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் மற்றும் பஞ்சாயத்து ராஜ் (SIRD & PR) மறைமலை நகர், காஞ்சிபுரம் மாவட்டம்.

கிராமத்தில் உள்ள முக்கிய வீடுகள் மற்றும் தெருக்கள் பற்றிய வரைபடம் வரைதல் குறித்த பயிற்சி வழங்கப்பட்டது. இடம் : மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் மற்றும் பஞ்சாயத்து ராஜ் (SIRD & PR) மறைமலை நகர், காஞ்சிபுரம் மாவட்டம்.

திறந்தவெளியில் மலம் கழிக்கும் வீடுகளை அடையாளம் காணும் பயிற்சி அளித்தல்.
இடம் : மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் மற்றும் பஞ்சாயத்து ராஜ் (SIRD & PR) மறைமலை நகர், காஞ்சிபுரம் மாவட்டம்.

தூண்டுதல் பற்றி கிராம மக்களிடம் எவ்வாறு விளக்குதல் பற்றிய பயிற்சிஅளித்தல்.
இடம் : மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் மற்றும் பஞ்சாயத்து ராஜ் (SIRD & PR) மறைமலை நகர், காஞ்சிபுரம் மாவட்டம்.

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம், வாரணவாசி கிராம ஊராட்சியில், அவளூர் கிராமத்தில் கிராம சமுதாயத்தைத் தூண்டும் பயிற்சி அளிக்கப்பட்டது.

கிராமத் தன்னார்வலர்களுடன், ஊக்குநர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் விவாதித்தனர்.
இடம் : காஞ்சிபுரம் மாவட்டம்.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

IFAD
Enabling poor rural people to overcome poverty

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்
திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப.,
முதன்மைச் செயலர் / திட்ட இயக்குநர்

திரு. எல். ராஜா,
கூடுதல் இயக்குநர்
திரு. இரா. இரவிச்சந்திரன்,
தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர்

நாகை மாவட்ட கடலோர மா விவசாயிகள் கூடுதல் வருமானம் பெற மாகூழ் பதனிடும் அலகு நிறுவுவதற்கான ஒப்பந்தம்

பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதி உதவியுடன் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ், நாகப்பட்டினம் மாவட்டத்தில் துணைப்பிரிவு திட்டமாக சுமார் 3000 மா விவசாயிகள் பயனடையும் வகையில் மா சாகுபடி மற்றும் உற்பத்தித் திட்டம் கடந்த இரண்டு ஆண்டுகளாக செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் பலனாக மா விவசாயிகள் இயற்கை விவசாயம் மேற்கொண்டு தங்களது மா மகசூலை நிறுவப்பட்ட கொள்முதல் மையங்கள் மூலமாக விற்பனை செய்து, கூடுதல் வருமானம் பெற்று வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக விவசாயிகள் தங்கள் மா மகசூலை பயன்டுத்தி, மாகூழ் தயாரித்து விற்பனை செய்து, உயரிய வருமானம் பெறும் நோக்கத்தோடு, சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் மூலமாக மாகூழ் பதனிடும் அலகு ஒன்று பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதி உதவியுடன் நிறுவிட உத்தேசிக்கப்பட்டு, முதன்மைச் செயலாளர் / திட்ட இயக்குநர் அவர்களின் முன்னிலையில், இத்திட்ட பங்குதாரர்களுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

மாகூழ் பதனிடும் தொழிற்சாலை அமைத்திடும் முதல் கட்ட பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ■

செயல்படாத குழுக்களை செயல்பட வைத்து வங்கியில் கடன் இணைப்பு வழங்குதல்

கடலூர் மாவட்டத்தில், சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத் தின் கீழ் செயல்பட்டு வரும் 26 ஊராட்சிகளைச் சேர்ந்த செயல்படாத குழுக்களை செயல்பட வைக்க சிறப்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, அதன் மூலம் குழு உறுப்பினர்களுக்கு கிடைக்கப் பெறும் திட்ட பலன்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து மீள செயல்படுத்தப்பட்ட குழுக்களுக்கு வங்கியாளர்கள், மாவட்ட செயலாக்க அலுவலக அலுவலர்கள், ஆலோசகர், வள மைய ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் நெறியாளர்கள் மூலம் சிறப்பு தர மதிப்பீடு முகாம் நடத்தப்பட்டது.

தர மதிப்பீடு செய்யப்பட்ட சுய உதவிக் குழுக்களுக்கு பின்வரும் தொகை வங்கியின் மூலம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

குழுக்களின் எண்ணிக்கை	உறுப்பினர்களின் எண்ணிக்கை	தொகை ரூ.
39	565	100,91,000

கடன் இணைப்பு அனுமதி வழங்கப் பெற்ற குழு உறுப்பினர்கள் மூலம் செயல்படாத குழுக்களையும் செயல்படுத்திட சிறப்புக் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் கடன் தொகையின் மூலம் பல தொழில்களை ஏற்படுத்திட வழிவகை செய்த சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு நன்றி தெரிவித்தனர். ■

கங்காதேவி கூட்டுப் பொறுப்புக் குழு

நாகப்பட்டினம் மாவட்டம், அக்கரைப்பேட்டை ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பில் உறுப்பினராக இணைந்துள்ள முத்து மாரியம்மன் சுய உதவிக் குழுவிங்ன உறுப்பினர்கள் சேர்ந்து, தொழில் நடத்துவதற்கு சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் மற்றும் நாபின்ஸ் நிதி நிறுவனத்திடம் ரூ. 2,86,000/– கடன் உதவி பெற்று, தங்களின் பங்குத் தொகையாக ரூ. 14,000/– செலுத்தி, கங்காதேவி கூட்டுப் பொறுப்புக் குழு என்ற பெயரில் கருவாடு உற்பத்தி மற்றும் விற்பனை செய்யும் தொழிலை துவங்கினர்.

கருவாடு உற்பத்தி மற்றும் விற்பனை செய்து, தற்பொழுது வரை ரூ. 2,52,628/– அசலும் வட்டியும் செலுத்தியுள்ளதாகவும், தங்களுக்கு அதிக வருமானம் கிடைப்ப தால் பிரதி மாதம் 3ஆம் தேதியே வங்கியில் கடன் தொகையை செலுத்தி விடுவதாகவும், தற்போது இந்தத் தொழில் மூலம் கணிசமான வருவாய் கிடைப்பதால், தங்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து வருவதாகவும், குழந்தைகளை நல்ல முறையில் படிக்க வைத்து வருவதாகவும், சுனாமியால் இடிந்த வீட்டை புதுப்பித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

முன்பு இருந்ததைவிட தற்பொழுது கங்கா தேவி கூட்டுப் பொறுப்புக் குழு உறுப்பினர்களின் வாழ்க்கைத் தரமும், பொருளாதார நிலையும் உயர்ந்துள்ளது. தங்களுடைய வாழ்க்கையில் வளத்தை ஏற்படுத்திய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு கங்காதேவி கூட்டுப் பொறுப்புக் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் தங்களது நெஞ்சார்ந்த நன்றியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றனர். ■

ஜெராக்ஸ் இயந்திரத்துடன் DTP மையம் குறுந்தொழில் நடத்தும் ஒரு பெண்ணின் வெற்றிக் கதை

என்னுடைய பெயர் சமனஸ் மேரி. காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், புதுப்பட்டினம் ஊராட்சியில் நான் வசித்து வருகின்றேன். நான் செந்தமிழ் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ளேன். என்னுடைய கணவர் இறந்து விட்டார். எனக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். குழந்தைகளை வைத்துக் கொண்டு, மிகவும் கஷ்டப்பட்டேன். அப்போது புதுப்பட்டினம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிலிருந்து தொழில் செய்ய கடனுதவி வழங்குவதாகத் தெரிவித்தனர்.

அதன் பேரில் நான் ஏற்கனவே Xerox Machine & DTP Centre-ல் வேலை செய்த அனுபவத்தைக் கொண்டு, அவற்றையே தொழிலாகத் தேர்ந்தெடுத்தேன். பின் என்னுடைய பங்குத் தொகை ரூ. 43,000/-மும், சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கடன் தொகை ரூ. 2,50,000/-மும், வங்கிக் கடன் தொகை ரூ. 1,40,000/-மும் சேர்ந்து மொத்தம் ரூ. 4,33,000/- மதிப்பீட்டில் Golden Star Xerox Machine & DTP Centre என்ற பெயரில் தொழிலை ஆரம்பித்தேன்.

இந்தத் தொழில் மூலம் இதுவரை மொத்த வருமானமாக ரூ. 10,59,964/- கிடைக்கப் பெற்றது. அதில் இலாப தொகை ரூ. 3,79,500/- ஆகும். சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கடன் தொகையில் ரூ. 2,50,000/-த்தையும், வங்கிக் கடன் தொகையில் ரூ. 1,40,000/-த்தையும் கட்டி முடித்துள்ளேன். இந்தத் தொழில் மூலம் எனக்கு கணிசமான வருவாய் கிடைத்து வருவதால், தற்போது என்னுடைய பிள்ளைகளை நல்ல முறையில் படிக்க வைக்கின்றேன். என்னுடைய வாழ்வாதாரத்திற்கு வழிகாட்டிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

– திருமதி. சமனஸ் மேரி

காப்பீடு (வீட்டுக் காப்பீடு)

கன்னியாகுமரி மாவட்டம், முஞ்சிறை வட்டாரத்திற்குட்பட்ட கடலோர கிராம அளவிலான ஊராட்சியான தூத்தூர் பகுதியில் சின்னத்துறை குக்கிராமத்தில் வசித்து வரும் 48 வயதான திருமதி. ஸ்டெல்லா என்பவர் (கணவரை இழந்தவர்) அந்த கிராமத்தில் தனது மூன்று குழந்தைகளுடன் வசித்து வருகிறார்.

தூத்தூர் கிராம அளவிலான கூட்டமைப்பில் உள்ள சுய உதவிக் குழுவில் 2010ஆம் ஆண்டு முதல் இணைந்து செயல்பட்டு வரும் திருமதி. ஸ்டெல்லா, இத்திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் வீட்டுக் காப்பீட்டுத் திட்டத்தில் தனது குடும்பத்தை இணைத் திருக்கிறார்.

இந்நிலையில் கடலோரத்தில் இருந்த இவரது வீடு இயற்கை சீற்றத்தால் முற்றிலுமாக சேதமடைந்து விட்டது. இந்த தகவல் உடனடியாக நாகர்கோவில் யுனைடெட் இந்தியா நிறுவன அலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட்டு, அதன் பின்னர் சேதத்தை பார்வையிட்ட சேத மதிப்பீட்டு அலுவலர், சேதத்தை மதிப்பீடு செய்த பின்னர், வீட்டிற்கான இழப்பீடாக ரூ. 18,000/-த்தை திருமதி. ஸ்டெல்லாவிடம் வழங்கப்பட்டது.

இதன் மூலம் வீட்டை இழந்த அவசர காலத்தில் உரிய இழப்பீடு கிடைக்கப் பெற்றதால், தனது குடும்பத்திற்கு சற்று மன நிம்மதி தந்துள்ளது என திருமதி. ஸ்டெல்லா கூறினார். ■

விழுப்புரம் மாவட்ட மீனவர் சங்கங்களின் சம்மேளனம் மூலம் கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு கடன் வழங்கும் விழா

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் விழுப்புரம் மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களில் உறுப்பினராக இல்லாத பயனாளிகளைக் கண்டறிந்து, அப்பயனாளிகளை கூட்டுப் பொறுப்புப் குழுக்களாக அமைத்து, கூட்டுப் பொறுப்பு குழுவின் நோக்கம், பயன்பாடு, தொழில் சார்ந்த அனுபவங்கள், சந்தைப்படுத்தும் முறை, காப்பீட்டின் அவசியம், மாத சேமிப்பு மற்றும் முறையாக கடன் திருப்பம் செய்தல் போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் வழிகாட்டுதலின்படி இப்பகுதியில் கவிகா நிறுவனம் செயல்பட்டு வருகின்றது. விழுப்புரம் மாவட்டத்தில் ஏழு ஊராட்சிகளுக்கு உட்பட்ட மீனவ கிராம பெண்கள் பயன் பெறும் வண்ணம் இத்திட்ட கூடுதல் திட்ட இயக்குநர் திரு. எல். இராஜா அவர்களால் 18 கூட்டுப் பொறுப்புக் குழுக்களைச் சேர்ந்த, 94 பயனாளிகளுக்கு தொழில் கடனாக ரூ. 14,10,000/- வழங்கப்பட்டது.

ஐஸ் பெட்டி, எடை இயந்திரம், மீன்களை சுத்தம் செய்ய கத்தி, அட்டை மற்றும் பாத்திரங்கள் வழங்கப்பட்டன. இத்திட்டத்தின் மூலம் எங்கள் குடும்ப வாழ்வாதாரம் நிலைத்த தன்மை அடையும் என்பதை மீனவ கிராம மகளிர் கூட்டுப் பொறுப்புக் குழுக்களின் உறுப்பினர்கள் தெரிவித்தனர். ■

வாழ்வாதார நடவடிக்கைகளுக்கான ஆய்வுக் கூட்டம்

2016-2017ஆம் ஆண்டின் வாழ்வாதார நடவடிக்கைகளின் சாதனை மற்றும் 2017-18ஆம் ஆண்டின் முதல் காலாண்டின் தொழில் சார் கூட்டுப் பொறுப்புக் குழுக்களின் செயல்பாடுகள் மற்றும் இரண்டாவது காலாண்டிற்கான செயல் திட்டம் குறித்து ஆய்வு மேற்கொள்ளும் பொருட்டு, அனைத்து ஆலோசகர்கள், இளம் தொழில் வல்லுநர்கள், நிறுவன வளர்ச்சி அலுவலர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், வியாபார ஊக்குநர்கள் மற்றும் கூடுதல் வியாபார ஊக்குநர்களுக்கு ஒரு நாள் ஆய்வுக் கூட்டம் 31.05.2017 அன்று கூடுதல் இயக்குநர் திரு. எல். இராஜா அவர்களின் தலைமையில், காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலை நகரில் அமைந்துள்ள மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தில் நடைபெற்றது. இதில் திட்டத்தின் முதுநிலை ஊரக நிதி மேலாளர், மண்டல மேலாளர், பல்லவன் கிராம வங்கி மற்றும் தலைமை மேலாளர், இந்தியன் வங்கி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூடுதல் இயக்குநர் அவர்களால், கூட்டுப் பொறுப்புக் குழுக்களின் தற்போதைய நிலை மற்றும் இரண்டாவது காலாண்டிற்கான கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கான நுண் கடனுக்கான இலக்கு கூட்டு வள மையம் வாரியாக நிர்ணயிக்கப்பட்டதுடன், கூட்டுப் பொறுப்புக் குழுக்களின் கடன் திருப்பத் தொகை மற்றும் அதற்கான கால அட்டவணை போன்றவைகள் வரையறுக்கப்பட்டு மாவட்டம் மற்றும் கூட்டு வள மையம் வாரியாக ஆய்வு செய்யப்பட்டது.

மேலும் ஒவ்வொரு ஆலோசகர் மற்றும் இளம் தொழில் வல்லுநர்களும் மாவட்ட வாரியாக அந்தந்த மாவட்டத்திற்கான தொழிலை தேர்ந்தெடுத்து, அதனை செயல்படுத்தும் முறை, அதனால் அடையும் பயன்கள், அதற்கான வரவு / செலவு மற்றும் சந்தைப்படுத்துதல் பற்றிய விளக்கக் காட்சியை இக்கூட்டத்தில் மண்டல மேலாளர், பல்லவன் கிராம வங்கி அவர்களால் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் வங்கி மூலம் கடன் பெறுவதற்கான தகுதிகள் பற்றி விவரிக்கப்பட்டது. தலைமை மேலாளர், இந்தியன் வங்கி அவர்களால், திட்ட மாவட்டங்களில் உள்ள கூட்டுப் பொறுப்புக் குழுக்கள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் வணிக மேம்பாட்டு முகவராக செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு கடன் தருவதாகவும், இத்திட்டத்துடன் இணைந்து செயல்படுவோம் என்று உறுதி அளிக்கப்பட்டது.

மாவட்ட மற்றும் கூட்டு வள மைய பணியாளர்கள் அனைவரும் மேற்படி நிர்ணயிக்கப்பட்ட இலக்கை கால நேரத்திற்குள் முடிப்பதாக உறுதி அளித்தனர். இறுதியில் திட்டத்தின் முதுநிலை ஊரக நிதி மேலாளர் நன்றி கூற, ஆய்வுக் கூட்டம் இனிதே முடிவுற்றது. ■

திருவாரூர் மாவட்டத்தில் உள் கட்டமைப்பு பணிகள் அடிக்கல் நாட்டும் விழா

திருவாரூர் மாவட்டத்தில், சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் மூலம், முத்துப்பேட்டை ஒன்றியம், ஜாம்புவானோடை ஊராட்சியில், ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்புக் கட்டிடத்திற்கும், தில்லை விளாகம் ஊராட்சியில் ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்புக் கட்டிடத்திற்கும், தொண்டியக்காடு ஊராட்சியில் ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்புக் கட்டிடம், மீன் உலர் களம் மற்றும் வலை பின்னும் கூடம் ஆகிய பணிகளுக்கு, திட்டத்தின் கூடுதல் இயக்குநர் திரு. எல். இராஜா அவர்களால் கடந்த 26.05.2017 அன்று பணிகள் தொடங்கப்பட்டன.

ஜாம்புவானோடை ஊராட்சியில், மகளிர் குழுக் கூட்டமைப்புக் கட்டிடத்திற்கு ரூ. 9.80 இலட்சம் மதிப்பீட்டிலும், தொண்டியக்காடு ஊராட்சியில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக் கட்டிடம் மற்றும் மீன் உலர் களம் பணிக்கு ரூ. 6.65 இலட்சம் மதிப்பீட்டிலும், வலைப் பின்னும் கூடம் ரூ. 9.65 இலட்சம் மதிப்பீட்டிலும் என ஆக மொத்தம் ரூ. 35.90 இலட்சம் செலவில் 3 பணிகளின் கட்டுமான பணிகள் தொடங்கப்பட்டது.

தங்களின் ஊராட்சிகளுக்கு கூட்டமைப்பு கட்டிடம், மீன் உலர் களம் மற்றும் வலை பின்னும் கூடம் ஆகிய பணிகளுக்கு நிதி உதவி அளித்த திட்ட இயக்குநர் அவர்களுக்கும், கூடுதல் இயக்குநர் அவர்களுக்கும் கூட்டமைப்புகளின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்ளப்பட்டது. ■

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள் கட்டமைப்பு பணிகள் அடிக்கல் நாட்டும் விழா

தஞ்சாவூர் மாவட்டம் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் மூலம், பட்டுக்கோட்டை ஒன்றியம், டி. மேலக்காடு ஊராட்சியில், ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்புக் கட்டிடத்திற்கும், தில்லை விளாகம் ஊராட்சியில் ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்புக் கட்டிடத்திற்கும், தாமரக்கோட்டை தெற்கு ஊராட்சியில் வலை பின்னும் கூடம் ஆகிய பணிகளுக்கு, திட்டத்தின் கூடுதல் இயக்குநர் திரு. எல். இராஜா அவர்களால் கடந்த 28.04.2017 அன்று தொடக்க விழா பணிகள் நடைபெற்றன.

டி. மேலக்காடு ஊராட்சியில் மகளிர் குழு கூட்டமைப்புக் கட்டிடத்திற்கு ரூ. 9.62 இலட்சம் மதிப்பீட்டிலும், தாமரக்கோட்டை தெற்கு ஊராட்சியில் வலைப்பின்னும் கூடம் ரூ. 9.23 இலட்சம் மதிப்பீட்டிலும் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டன. மேலும் தங்களது ஊராட்சிப் பகுதிகளில் ஊராட்சிகளுக்கு கூட்டமைப்பு கட்டிடம் மற்றும் வலை பின்னும் கூடம் ஆகிய பணிகளுக்கு நிதி உதவி அளித்த திட்ட இயக்குநர் அவர்களுக்கும், கூடுதல் இயக்குநர் அவர்களுக்கும் கூட்டமைப்புகளின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்ளப்பட்டது. ■

கன்னியாகுமரி மாவட்டத்தில் திட்டப் பணிகள் கூடுதல் திட்ட இயக்குநர் ஆய்வு

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் பல்வேறு திட்டப் பணிகள் குறித்து, கன்னியாகுமரி மாவட்ட செயல்பாடுகளை திட்ட கூடுதல் இயக்குநர் திரு. எல். இராஜா அவர்கள் ஆய்வு செய்தார்.

சின்ன முட்டம் மீன்பிடி துறைமுகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்கை பவளப் பாறைகள் தயாரிக்கும் பணிகளை ஆய்வு செய்த கூடுதல் இயக்குநர் அவர்கள், ஜூலை மாதத்திற்குள் பவளப் பாறைகள் தயாரிக்கும் பணிகளை முடிக்குமாறு அறிவுறுத்தினார். பின்னர் ஸ்டெல்லா மேரீஸ் நிறுவனத்தில் நடைபெற்ற 400 மகளிர் குழுக்களுக்கான சூரிய ஒளி மூலம் மீன்களைப் பதப்படுத்தும் செயல்முறை குறித்த கருத்தரங்கினை கன்னியாகுமரி மாவட்ட கூடுதல் ஆட்சியர் அவர்களுடன் கூடுதல் இயக்குநர் அவர்கள் இணைந்து துவக்கி வைத்தார்.

அதைத் தொடர்ந்து, கடியப்பட்டினம் மற்றும் சைமன் காலனி ஆகிய பகுதிகளில் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள மீன் வலைப் பின்னும் கூடம் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக ஒப்படைக்கப்பட்டது. மேலும் மாவட்ட செயலாக்க அலுவலகத்தில் அனைத்து கூட்டு வள மைய பணியாளர்கள் மற்றும் இரண்டாம் நிலை அலுவலர்களுக்கு திட்டங்கள் குறித்து தகவல் பரிமாற்றம் மேற்கொள்ளப்பட்டது. ■

மின்னணு சேவை மையம் செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் நிர்வாகிகளுக்கு ஒருநாள் கருத்துப் பட்டறை

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் செயல்படும் திருவள்ளூர், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் உள்ள 19 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் மின்னணு சேவை மையம் அமைக்க, தமிழ்நாடு மின்னணு சேவை முகமையின் அனுமதி பெற்று, தற்போது செயல் பாட்டில் உள்ளது. இம்மையங்கள் செயல்படுவதற்கு, புதிதாக மின்னணு பணப் பரிவர்த்தனைக்கு ஆதார் எண் மூலம் செயல்படுத்தப்படும் பயோமெட்ரிக் கருவிகள் கொள்முதல் செய்து வழங்கப்பட்டுள்ளது.

இம்மையங்களின் செயல்பாட்டை செம்மைப்படுத்தி வெற்றிமயமாக்கவும், மின்னணு பணப் பரிவர்த்தனை இயந்திரத்தைப் பயன்படுத்தும் விதம் மற்றும் பயன்பாடு குறித்தும், ஒருநாள் கருத்துப் பட்டறை 09.06.2017 அன்று மத்திய திட்ட மேலாண்மை அலகில், திட்ட கூடுதல் இயக்குநர் அவர்களின் முன்னிலையில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட தமிழ்நாடு மின்னணு சேவை மைய முகமையின் பிரதி நிதி மூலம், இம்மையம் வெற்றிகரமாக நடத்துதல், மின்னணு பணப்பரிவர்த்தனை இயந்திரத்தைப் பயன்படுத்துதல் மற்றும் இ-வேலட் மூலம் சான்றிதழ்கள் உருவாக்குதல் போன்ற செயல்பாடுகள் குறித்த விவரங்களையும், ஆலோசனை களையும் மின்னணு சேவை மையஉதவியாளர்களிடம் பகிர்ந்து கொள்ளப்பட்டது. மேலும் செயல்பாடாத மையங்களை செயல்படுத்தி பயன் பெறுவதின் நோக்கம் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

இக்கருத்துப் பட்டறையில் தகவல் தொழில் நுட்ப மேலாளர், சமுதாய வளர்ச்சி அலுவலர், கண்காணிப்பு (ம) மதிப்பீட்டு அலுவலர் மற்றும் மின்னணு சேவை மைய உதவியாளர்கள் கலந்து கொண்டனர். ■

கன்னியாகுமரி மாவட்டத்தில் வங்கியாளர்கள், கூட்டமைப்புகள் மற்றும் அலுவலர்களுடன் வாழ்வாதாரக் கடன் குறித்த கருத்தரங்கம்

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 13 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் செயல்படும் வியாபார மேம்பாட்டு முகவர்கள், வங்கியாளர்கள் மற்றும் இத்திட்டத்தின் அலுவலர்கள் கலந்து கொண்ட ஒருநாள் கருத்தரங்கு, இத்திட்டத் தின் கூடுதல் இயக்குநர் திரு. எல். இராஜா அவர்களால் 09.06.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டது. மாவட்டச் செயலாக்க அலுவலர், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர், மாவட்ட வளர்ச்சி மேலாளர், நாபின்ஸ் மேலாளர், ஐசிஐசிஐ வங்கி மேலாளர், இந்தியன் வங்கி மேலாளர், சிண்டிகேட் வங்கி மேலாளர், திட்ட இரண்டாம் நிலை அலுவலர்கள் மற்றும் கூட்டு வள மையப் பணியாளர்கள் ஆகியோர் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

இக்கருத்தரங்கில் ஐசிஐசிஐ வங்கியின் மூலம் 12 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 57 இலட்சம் கடனாக வழங்கப்பட்டது. மேலும் ஜூன் மாதம் 28ஆம் தேதி இம்மாவட்டத் தின் கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கான கடன் இணைப்பு, சுய உதவிக் குழு கடன் இணைப்பு, தனிநபர் கடன் என மொத்தம் ரூ. 2 கோடி மதிப்பில் கடன் வழங்க வங்கியாளர்கள் தயார் நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

வங்கிக் கடன் வழங்குவது மற்றும் திருப்பிச் செலுத்துவதில் உள்ள சிக்கல்கள் குறித்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் பொறுப்பாளர்கள் விவரித்ததுடன், வங்கியாளர்களும் தங்களது கருத்துக்களை எடுத்துரைத்தனர். ■

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

மக்களே முதன்மை

புது வாழ்வு திட்டம்

நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

புதுக்கோட்டை மாவட்டத்தில் மக்கள் நல்வாழ்வு மற்றும் மற்றும் குடும்பப நலத்துறை சார்பில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவ மனையின் திறப்பு விழா 09.06.2017 அன்று நடைபெற்றது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு, அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையினை திறந்து வைத்து சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில் 44 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. இதில் புதுவாழ்வு திட்டத்தின் அமுதசுரபி நிதியின் கீழ் ரூ. 1,24,60,000/–மும், மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கு தனிநபர் கடனாக ரூ. 30 இலட்சமும், இளைஞர் திறன் தொழிற்பயிற்சி மூலமாக பயிற்சி பெற்றவர்களுக்கு ரூ. 5,24,000/–ம் மதிப்பிலான ஆட்டோக்களும், பொக்லைன் பயிற்சி பெற்றவர் களுக்கு சான்றிதழ்கள், பணி ஆணைகள் மற்றும் கனரக வாகன ஓட்டுநர் வில்லை வழங்குதல் என மொத்தம் ரூ. 1.59 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

இவ்விழாவில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு தலைமைச் செயலாளர், குடும்ப நலத்துறை முதன்மை செயலாளர் மற்றும் பல்வேறு துறைகளின் அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகள் கூடுதல் திட்ட இயக்குநர் ஆய்வு

திருநெல்வேலி மாவட்டத்தில் 156 ஊராட்சிகளில் புதுவாழ்வு திட்டம் சார்பில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், ஒத்தத் தொழில் குழுக்கள் மற்றும் சமூகத் தணிக்கைக் குழுக்கள் போன்றவை அமைக்கப்பட்டு, அவைகள் சிறப்புடன் செயல்பட்டு வருகின்றன.

புதுவாழ்வு திட்டத்தின் கூடுதல் திட்ட இயக்குநர் திரு. ஜா. சம்பத் அவர்கள், திருநெல்வேலி மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஒத்தத் தொழில் குழு கூட்டமைப்பு மூலம் செயல்படும் விற்பனை இணையம், மாவட்ட மகமை ஆகியவற்றின் செயல்பாடுகளை ஆய்வு செய்த கூடுதல் திட்ட இயக்குநர் அவர்கள், பல்வேறு ஆலோசனைகளை வழங்கியதுடன், நலிவுற்றோர், மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு தனிநபர் கடன் வழங்கினார்.

மேலும் அப்பகுதியில் சுகாதார விழிப்புணர்வு பயிற்சி, தனி நபர் கழிப்பறை ஆகியவற்றை பார்வையிட்டதுடன், கூட்டமைப்பின் செயல்பாடு குறித்து உறுப்பினர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டார்.

பின்னர் ஸ்ரீ சாய் பிரிண்டிங் தொழில் குழுவினைப் பார்வையிட்டு, மேலும் சிறப்பாக செயல்படுவதற்கான ஆலோசனைகளையும் வழங்கினார். இந்த ஆய்வின் போது, திருநெல்வேலி மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர், உதவித் திட்ட மேலாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர். ■

மலைவாழ் மக்களின் வாழ்வாதார செயல்பாடுகள் உலக வங்கி ஆலோசகர் ஆய்வு

உலக வங்கி ஆலோசகர் திரு. ஆர். ஆர். மோகன் அவர்கள் மற்றும் பழங் குடியினருக்கான மாநில வல்லுநர் திரு. தில்லை நாயகம் ஆகியோர், நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை ஒன்றியத்தில் செயல்பட்டு வரும் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

ஆய்வின் முதற்கட்டமாக செம்மேடு களப்பகுதியைச் சேர்ந்த திண்ணனூர் நாடு ஊராட்சிக்குட்பட்ட வாசலூர்பட்டி கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடல் மேற் கொண்டு, திட்டம் மூலம் பெற்ற பயன்கள் குறித்து கேட்டறிந்தனர்.

பின்னர் அதே ஊராட்சியைச் சேர்ந்த ஊர்புறம் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத் தின் சக்தி காபி வளர்ப்பு ஒத்தத் தொழில் குழுவின் உறுப்பினர்களைச் சந்தித்து, தொழில் நடைமுறைகள் குறித்து கலந்துரையாடி, காபி Pulping Machine மற்றும் Pepper Deconer கருவிகளை ஒத்தத் தொழில் குழுவினர் பயன்படுத்துவது குறித்த விபரங்களை கேட்டறிந்தனர். மேலும் அந்த ஊராட்சியில் நடைபெற்று வரும் Wash Demo Model சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு பயிற்சியைப் பார்வையிட்டனர்.

அதைத் தொடர்ந்து, தெம்பளத்தில் செயல்பட்டு வரும் காபி மற்றும் மிளகு கூட்டமைப்பு உறுப்பினர்களுடன் விவாதித்து, காபி கூட்டமைப்பின் கொள்முதல் மற்றும் விற்பனை செயல்பாடுகளைக் கேட்டறிந்தனர். தொடர்ச்சியாக இப்பணியினை செய்வதற்கான வழிகாட்டுதல் தேவை என கூட்டமைப்பின் உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டனர்.

புதுவாழ்வு திட்டத்தினால் வறுமை நிலையிலிருந்து சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வெளிவந்திருப்பது நல்ல முன்னேற்றம் என உலக வங்கியின் ஆலோசகர் பாராட்டினார். இந்த ஆய்வில் போது நாமக்கல் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. ஜி. குமரன் மற்றும் உதவித் திட்ட மேலாளர்கள் உடனிருந்தனர். ■

நாமக்கல் மாவட்டம்

புதுவாழ்வு திட்ட செயலாக்க முடிவு அறிக்கை தயாரித்தல் குறித்து உலக வங்கி குழுவினர் கலந்தாலோசனைக் கூட்டம்

தமிழகத்தின் கிராமப்புறங்களில் வசிக்கும் ஏழை மக்களின் வறுமையை நீக்கிடவும், அவர்களைப் பொருளாதார சுய சார்பு பெற்றவர்களாக முன்னேற்றம் அடையச் செய்திடவும், உலக வங்கியின் நிதி உதவியுடன், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறையின் வழிகாட்டுதலின் கீழ் தமிழகத்தில் புதுவாழ்வு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2005ஆம் ஆண்டு துவக்கப்பட்ட இத்திட்டம் 2017ஆம் ஆண்டு ஜூன் மாதத்துடன் நிறைவு பெறுகிறது.

இதன் தொடர்ச்சியாக இதுவரை புதுவாழ்வு திட்டத்தின் செயலாக்கத்தின் முடிவு அறிக்கை குறித்து, உலக வங்கிக் குழுவினர் கலந்தாலோசனைக் கூட்டம் 2017 ஜூன் 13 மற்றும் 14 ஆகிய தேதிகளில் சென்னையில் நடைபெற்றது.

புதுவாழ்வு திட்டத்தின் திட்ட இயக்குநர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்தாலோசனைக் கூட்டத்தில், உலக வங்கியின் பிரதிநிதிகள், புதுவாழ்வு திட்டத்தின் கூடுதல் திட்ட இயக்குநர்கள் திரு. ஜா. சம்பத் அவர்கள், திருமதி. சு. சிநேகலதா அவர்கள், வல்லுநர்கள், மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர்கள், உதவித் திட்ட மேலாளர்கள், சமூகப் பணியாளர்கள் மற்றும் திட்டப் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்தாலோசனைக் கூட்டத்தில், தமிழகத்தின் அனைத்து மாவட்டங் களிலும் புதுவாழ்வு திட்டத்தின் வழிகாட்டுதலுடன் இதுவரை மேற்கொள்ளப் பட்ட செயல்பாடுகள், நிறைவுற்ற இலக்குகள், நடைபெற வேண்டிய பணிகள் போன்றவை குறித்து உலக வங்கிக் குழுவினரிடம் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர்கள் விளக்கிக் கூறினர். மேலும் செயல்படுத்த வேண்டிய பணிகளின் நிலை குறித்தும், அவற்றை நிறைவு செய்ய மேற்கொள்ள வேண்டியவை குறித்தும் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டன. ■

ஆயத்த ஆடை தயாரிப்பு நிறுவனம் துவக்கம்

தருமபுரி மாவட்டம்

தருமபுரி மாவட்டத்தில் 2011 ஆம் ஆண்டு முதல் புதுவாழ்வு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்டத்தின் 6 ஒன்றியங்களில் உள்ள 193 கிராம ஊராட்சிகளில் அமைக்கப்பட்டுள்ள 222 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் மூலம் கிராமப்புற மக்களின் வறுமை ஒழிப்பு செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்சியாக, பாலக்கோடு ஒன்றியம், சிக்கமாரண்ட அள்ளி ஊராட்சியில் புதுவாழ்வு திட்டத்தின் வழிகாட்டுதலுடன் அமைக்கப்பட்டுள்ள மகளிர் தொழில் முனைவோருக்கான ஆயத்த ஆடை தயாரிப்பு நிறுவனத்தை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் திரு. கே. பி. அன்பழகன் அவர்கள் திறந்து வைத்தார். தருமபுரி மாவட்ட ஆட்சியர் திரு. கே. விவேகானந்தன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் தருமபுரி மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர், உதவித் திட்ட மேலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த ஆயத்த ஆடை தயாரிப்பு நிறுவனத்தினை துவக்க, சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புதுவாழ்வு திட்டத்திற்கு ரூ. 9 இலட்சம் மதிப்பில் 36 தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இரண்டு சுழற்சியாக இயங்கும் இந்த தயாரிப்பு நிறுவனத்தின் மூலம் 72 ஏழைப் பெண்கள் நிரந்தர வருவாய் பெற்று வருகின்றனர். ■

கால்நடைத் தீவன உற்பத்திக் கூடம் மாவட்ட ஆட்சியர் ஆய்வு

வேலூர் மாவட்டம்

வேலூர் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை 24.05.2017 அன்று வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின் முதற்கட்டமாக கால்நடை தீவன உற்பத்திக் கூடத்தை பார்வையிட்டு ஆய்வு செய்த மாவட்ட ஆட்சியர் அவர்கள், கூட்டமைப்பின் மூலம் இலக்கு மக்களின் தேவையின் அடிப்படையில் எவ்வாறு கால்நடை தீவனம் உற்பத்தி செய்து விற்பனை வரை உள்ள செயல்பாடுகளைக் கேட்டறிந்தார்.

மேலும் இந்தக் கூட்டமைப்பின் மூலம் இதுவரை 124 டன் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டதன் மூலம் ரூ. 2,81,000/- வரை இலாபம் ஈட்டப்பட்டுள்ளது. 137 CLGயின் உறுப்பினர்கள் இந்த தீவனத்தைப் பெற்று, தங்களது கால்நடைகளின் பால் கறவையின் அளவு உயர்ந்துள்ளதையும், அதனுடன் பாலில் உள்ள கொழுப்புச் சத்து மற்றும் இதர சத்துக்கள் உயர்ந்து, நல்ல விலை கிடைத்து பயனடைந்து வருவதாக மாவட்ட ஆட்சியரிடம் கூறினர்.

இந்த ஆய்வின் போது, வேலூர் மாவட்ட புதுவாழ்வு திட்டத்தின் மேலாளர் திரு. எஸ். கே. சம்பத்குமார், உதவித் திட்ட மேலாளர்கள் திரு. எஸ். சுபாஷ் சந்திரன், திரு. பி. தணிகைவேல், பால்வள ஆலோசகர், வேளாண்மை ஆலோசகர் மற்றும் களப்பகுதி பணியாளர்கள் ஆகியோர் உடனிருந்தனர். ■

சுகாதாரம் தொடர்பான பயிற்சிகள்

விருதுநகர் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டம் செயல்படும் சாத்தூர், வெம்பக்கோட்டை, வத்திராயிருப்பு மற்றும் நரிக்குடி ஆகிய ஒன்றியங்களில் Water and Sanitation Higine (WASH) நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதில் 8 ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு, அந்த ஊராட்சிகளில் VPRC Demo Model கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. அதைத் தொடர்ந்து 83 ஊராட்சிகளில் உறிஞ்சிக்குழி, உரக்குழி மற்றும் சுகாதாரமான தோட்டம் போன்றவை அமைக்கப்பட்டு, கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மேலும் 165 ஊராட்சிகளிலும் ஒரு ஊராட்சிக்கு 350 நபர்கள் வீதம் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு சுகாதாரம் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் அனைத்து ஊராட்சிகளிலும் சுகாதார குழு அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் குழுவின் உறுப்பினர்கள் மூலம் தங்கள் ஊராட்சியில் திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாத கிராமங்களாக மாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இதுபோன்ற அனைத்து ஊராட்சிகளிலும் மேற்கண்ட அனைத்து பணிகளும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ■

கிராமத்தைத் தூய்மைப்படுத்தும் WASH செயல்பாடுகள்

திருநெல்வேலி மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டம் செயல்படும் 156 ஊராட்சிகளிலும் WASH (குடிநீர் மற்றும் சுகாதாரம் ஒருங்கிணைப்புத் திட்டம்) செயல்பாடுகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சுகாதாரம் மற்றும் WASH Demo Model பயிற்சி அனைத்து பணியாளர்களுக்கும், சமூக வல்லுநர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் ஒரு களப்பகுதிக்கும் ஒரு ஊராட்சி வீதம் 11 ஊராட்சிகளில் சமுதாய உறிஞ்சிக்குழி அமைத்தல், உரக்குழி அமைத்தல், ஊட்டச்சத்து நிறைந்த தோட்டம் உருவாக்குதல் போன்ற பணிகள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும் 156 ஊராட்சிகளிலும் VPRC, PLF, SAC, SHG, CLG போன்ற மக்கள் அமைப்புகளின் அனைத்து கூட்டங்களிலும் சுகாதாரம், தனிநபர் கழிப்பறை பயன்பாடு, WASH Demo Model செயல்பாடுகள் ஆகியவை பற்றி விளக்கிக் கூறப்பட்டுள்ளன. பள்ளி மாணவர்களுக்கும், கிராம மக்களுக்கும் மேற்கண்ட அனைத்து செயல்பாடுகளும் விளக்கிக் கூறப்பட்டுள்ளன.

மேலும் 156 ஊராட்சிகளிலும் கிராம சுகாதார வரைபடம், சுகாதாரத்தில் முக்கியத்துவம் பற்றி விளக்கிக் கூறும் ஏணி பயிற்சி, கையொப்ப முகாம், கிராம மக்கள் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு பேரணி போன்ற செயல்பாடுகள் நடத்தப்பட்டு வருகின்றன. அனைத்து ஊராட்சிகளிலும் WASH Committee அமைக்கும் பணி சிறப்பாக நடைபெற்று வருகிறது.

திறந்தவெளியில் மலம் கழிப்பதால் ஏற்படும் நோய்கள் பற்றியும், சுகாதார சீர்கேடு மற்றும் பாதுகாப்பின்மை, பொருளாதார பாதிப்பு ஆகியவை பற்றியும், சுத்தமான குடிநீர் மற்றும் கழிப்பறையின் அவசியம் குறித்தும் கூறப்பட்டது. கழிப்பறையைப் பயன்படுத்துவதன் மூலம் மக்களின் வாழ்வாதாரம் மேம்பாடு அடைவதோடு, அவர்களின் பொருளாதார முன்னேற்றமும் ஏற்படும் என்ற கருத்தும், அத்துடன் மக்கள் குறிப்பாக பெண்கள், பெண் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் சுய மதிப்பினையும் உறுதிப்படுத்துவதையும் விளக்கிக் கூறப்பட்டது. ■

நாட்டுக் கோழி வளர்ப்பு

(சென்ற இதழ் தொடர்ச்சி)

கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்திற்கு பெரிதும் உதவிகரமாக இருப்பது நாட்டுக் கோழி வளர்ப்பாகும். சரிவிகித தீவனம் கொடுத்து, நோய் தடுப்பு முறைகளையும் பின்பற்றி வளர்த்தோமானால் நாட்டுக் கோழி வளர்ப்பு அதிக இலாபகரமான தொழிலாக அமையும்.

நாட்டுக் கோழிகள் பராமரிப்பு

நாட்டுக் கோழிகள் அதிகம் நோய் எதிர்ப்புத் திறனைக் கொண்டவை. இருப்பினும், சில நோய்களால் நாட்டுக் கோழிகள் பாதிக்கப்படுகின்றன. கோழிகளைப் பராமரிக்கும் முறைகளில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தாலோ அல்லது அவற்றின் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து, நோய் பாதிப்பு ஏற்பட்டோ பொருளாதார இழப்பு ஏற்படுகிறது. நோய் அறிகுறிகளைக் கண்டறிந்து முறையான சிகிச்சையினை அளிக்க வேண்டும். நாட்டுக் கோழிகள் அக மற்றும் புற ஒட்டுண்ணிகளால் அதிக அளவு பாதிக்கப்படுகின்றன.

நச்சுயிரி நோய்கள்

இராணிகெட் கழிச்சல் நோய்

இது ஒரு நச்சுயிரியால் ஏற்படும் தொற்று நோய் ஆகும். இந்நோய் தீவனம், குடிநீர், காற்று ஆகியவற்றின் மூலம் பரவும் தன்மை கொண்டது. நோய் கண்ட கோழிகள் வெள்ளையாகவும், பச்சையாகவும் கழியும். மூச்சுத் திணறல், நடுக்கம், வாதம் மற்றும் தீவனம் உட்கொள்ளும் அளவு குறைந்தும் காணப்படும். இந்நோய் பாதித்த கோழிகள், தலையை இரண்டு கால்களுக்கு இடையில் சொருகிக் கொள்ளும். இதனால் இதனைக் கொக்கு நோய் என்றும் அழைப்பர். இந்நோய் பெரும்பாலும் வெள்ளைக் கழிச்சல் நோய் என்றே அழைக்கப்படுகிறது. அதிக எண்ணிக்கையில் கோழிகள் இறந்து விடும். உரிய வயதில் தடுப்பூசி அளிப்பதால் இந்நோய் வராமல் தடுக்கலாம்.

பராமரிப்பு முறைகள்

அ) அலகு வெட்டுதல்

நாட்டுக் கோழிகள் ஒன்றையெ கொத்திக் கொள்ளாமல் இருக்கவும், தீவனம் விரையமாவதைத் தடுக்கவும் அலகு வெட்ட வேண்டும். வணிக நோக்கில் வளர்க்கப்படும் நாட்டுக் கோழிகளில் 15-18வது நாள் மற்றும் 35-40வது நாட்களில் அலகு வெட்டலாம். அல்லது கோழிகள் ஒன்றையொன்று கொத்திக் கொள்ளும் போது அலக வெட்டலாம். அலகு வெட்டப்பட்ட நாட்டுக் கோழிகளுக்கு சரியான விலை சந்தையில் கிடைப்பதில்லை என்பதை அறிந்து, தேவைப்பட்டால் மட்டுமே அலகு வெட்டப்பட வேண்டும்.

ஆ) குடற்புழு நீக்கம்

நாட்டுக் கோழிகளில், குடற்புழுக்களால் ஏற்படும் பாதிப்பு அதிகமாகும். ஆகவே, குடற்புழு நீக்க மருந்தை 30-35 நாள் வயதிலும், பிறகு எச்சத்தில் புழுக்கள் இருந்தால் கால்நடை மருத்துவரின் ஆலோசனைப்படியும் அளிக்க வேண்டும்.

இ) பேன் நீக்கம்

நாட்டுக் கோழிகள், கோழிப் பேன்களால் அதிகம் பாதிக்கப்படுகின்றன. கால்நடை மருத்துவரின் ஆலோசனைப்படி பேன் நீக்க மருந்தைப் பயன்படுத்தி பேன் நீக்கம் செய்யலாம்.

இறைச்சிக்காக வளர்க்கப்படும் நாட்டுக் கோழிகளில் தீவன மேலாண்மை

கால்நடை மற்றும் கோழிப்பண்ணைப் பராமரிப்பில் தீவனத்திற்கு ஆகும் செலவு மட்டும் 60-70 சதவிகிதமாகும். கோழிகளுக்கு அளிக்கப்படும் தீவனம் சமச் சீரானதாக இருக்க வேண்டும். கோழிகளுக்குத் தேவையான ஊட்டச்சத்து தீவனத்தின் மூலம் கிடைக்க வேண்டும். கோழிகளுக்குத் தீவனத்தில் முக்கியமான மாவுச்சத்து, நார்ச்சத்து, புரதச் சத்து, கொழுப்புச் சத்து, தாது உப்புகள், உயிர்ச்சத்து மற்றும் தண்ணீர் ஆகிய ஆறு வகையான ஊட்டச் சத்துக்கள் இருக்க வேண்டும். ஒவ்வொரு ஊட்டச் சத்தும் உடல் உறுப்புகளின் செயல்பாட்டிற்குக் காரணமாக இருக்கின்றன. சில தீவனப் பொருட்கள் எரிச்சத்தாகவும் அல்லது புரதச் சத்தாகவும் பயன்படுத்தப்படுகின்றன.

இவ்வாறு பயன்படுத்தப்படும் தீவனப் பொருட்களின் அளவு கோழிகளுக்குத் தேவையான ஊட்டச் சத்தின் அளவை நிறைவு செய்யக் கூடியதாக இருக்க வேண்டும். தீவிர முறையில் இறைச்சிக்காக வளர்க்கப்பட்ட நாட்டுக் கோழிகளுக்கு ஆரம்பகால குஞ்சுப் பருவத் தீவனம் மற்றும் முடிவு கால தீவனம் என இரண்டு வகையான தீவனங்களை அளிக்கலாம்.

தங்கள் பகுதியில் கிடைக்கும் தீவனப் பொருட்களைக் கொண்டு கால்நடை மருத்துவர் உதவியோடு தீவனம் தயாரித்துக் கொள்வதே சிறந்தது. சுமார் 250 கோழிகள் மட்டுமே வளர்ப்பவர்கள், தாங்களே தீவனம் அரைத்துக் கொள்ள இயலாது. குழுவாக சேர்ந்து ஏதேனும் ஒரு கோழித் தீவன தயாரிப்பாளரை அணுகி தீவனத்தை தயாரித்து வாங்கிக் கொள்ளலாம். அல்லது வெளிச்சந்தையில் கிடைக்கும் முட்டைக் கோழிக்கான குஞ்சுப் பருவத் தீவனத்தை, இறைச்சிக் கோழிக் குஞ்சுகளுக்கான துவக்கத் தீனி மற்றும் முடிவுத் தீனியையும் கூட வாங்கி, கால்நடை மருத்துவரின் ஆலோசனையின் பேரில் பயன்படுத்தலாம். ■

(தொடரும்)

- முனைவர் வே. புருஷோத்தமன்,
வணிக மேலாண்மை மற்றும் கூட்டாண்மை வல்லுநர்,
புதுவாழ்வு திட்டம், சென்னை.

Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From TNCDW, Annai Teresa Mahalir Valagam, 3rd Floor, Valluvakottam High Road, Nungambakkam, Chennai - 600 034 (60,000 Copies circulated) an Printed by S. BALASUBRAMANIAN, Works Manager 1, Government Central Press, No. 508, Mint Street, Vallalar Nagar, Chennai – 600 079. Editor : S. CHINNAPPAN.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு குறித்து கலந்தாய்வுக் கூட்டம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு வழங்குவது குறித்து, மாநில அளவிலான வங்கிகளின் கூட்டமைப்பின் (SLBC) உட்குழுவின் (Sub Committee) கலந்தாய்வுக் கூட்டம் 16.06.2017 அன்று, சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் அமைந்துள்ள நமது தலைமை அலுவலகத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்த கலந்தாய்வுக் கூட்டத்தில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் பொது மேலாளர் திரு. எம். எம். சாரங்கி அவர்கள், இந்தியன் வங்கியின் பொது மேலாளர் திரு. தேவராஜ் அவர்கள், நபார்ட் வங்கியின் துணைப் பொது மேலாளர் திரு. வீரா சங்கர் அவர்கள், ரிசர்வ் வங்கியின் அலுவலர் திரு. சம்பத் அவர்கள், கனரா வங்கியின் முதுநிலை மேலாளர் திரு. ரமேஷ் தவா அவர்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குநர் திரு. பா. செல்வராஜன் அவர்கள், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (TNULM) இணை இயக்குநர் திரு. எஸ். அண்ணாமலை பிரேம் குமார் அவர்கள், இணை இயக்குநர் (பொறுப்பு) திரு. ஜி. சீனிவாசராவ் அவர்கள் மற்றும் வாழ்வாதார இயக்கத்தின் ஆலோசகர் (நிதி உள்ளாக்கம்) திரு. திருநாவுக்கரசு அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில், நடப்பு ஆண்டில் (2017-18) மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான கடன் இணைப்பு இலக்கு ரூ. 7,000/- கோடி என நிர்ணயிக்கப்பட்டதை அங்கீகரித்து, அந்த இலக்கினை அடைய மேற் கொள்ளப்பட வேண்டிய செயல்பாடுகள் குறித்து முடிவு எடுக்கப்பட்டது. மேலும் வங்கிகள், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் தொகை வழங்கிய விவரங்களை மத்திய அரசின் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்வது குறித்தும், வட்டி மானியம் குறித்தும், வங்கிக் கணக்குடன் ஆதார் எண் மற்றும் கைப்பேசி எண் இணைப்பது குறித்தும் விவாதிக்கப்பட்டு, இலக்கினை அடைய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. ■

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 1722 / 2016
Reg. No. TN/CH/(C)/455/15-17 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP - 564 / 2015 - 17
Date of Publication : 2nd Week of the every month

கழிவறை பழக்கம், உடல்வளர்ச்சி, ஆரோக்கியம் மற்றும் அறிவு வளர்ச்சியின் அடையாளம்

திறந்தவெளியில் மலம் கழிப்பதால் வரும் நோய்கள்

- வாந்தி / வயிற்றுப்போக்கு / காலரா
- டைபாய்டு காய்ச்சல்
- குடற்புழுக்கள்
- மஞ்சள் காமாலை
- இளம்பிள்ளை வாதம்
- இரத்த சோகை

கடைபிடிக்க வேண்டிய சுகாதார பழக்க வழக்கங்கள் (டாக்டர்களின் அறிவுரைகள்)

திறந்த வெளியில் மலர் கழிக்கக் கூடாது

உணவுக்கு முன், கழிவறை பயன்படுத்திய பின் சோப்பு போட்டு கைகளை கழுவுதல்

நகங்களை வெட்டி சுத்தமாக வைத்திருத்தல்

காலணிகள் / செருப்பு அணிதல்

கழிவறைகளை பயன்படுத்துதல்

சுத்தமான குடிநீர், சுகாதாரமான உணவை உண்ணுதல்

காய்கறி பழங்களை கழுவிய பின் உட்கொள்ளுதல்

சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்தல்

சுகாதாரமாய் வாழ்ந்திடுவோம்! உடல் நலத்தை காத்திடுவோம்!